விலை : 20.00 website : www.valampurii.lk

பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 20 புதன்கிழமை (03.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 046

# யோஷிதவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## கடற்படை தளபதிக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் லெப்.யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கடற்படைத் தளபதிக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடற்படைத் தளபதியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## ‘ஒரு குழந்தையை கைது செய்தனர்’



(கொழும்பு)

யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டமை தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷ தனது டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஒரு குழந்தையைக் கைது செய்து அக்குழந்தையின் தந்தைக்கு கவலையைக் கொடுக்கும் பழி வாங்கும் அரசியல் என்று அவர் தனது டுவிட்டரில் கருத்து தெரிவித்திருந்தார்.

இக் கருத்துக்கு பலரும் தங்கள் கடும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். (செ-12)

## தமிழில் தேசிய கீதம் பாட மகிந்த எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதம் நாளை இடம்பெறவுள்ள சுதந்திர தின நிகழ்வில் தமிழில் பாடப்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவை சந்தோசப்படுத்தவே அரசாங்கம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாக மகிந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒரு நாட்டின் தேசிய கீதம் ஒரு மொழியிலேயே பாடப்பட வேண்டும். இரண்டு மூன்று மொழிகளில்

23ஆம் பக்கம் பார்க்க

# நிதிக்குற்ற விசாரணைப் பிரிவை உடனடியாக கலைக்க வேண்டும்!

## இல்லையேல் பதவிகளை இராஜினாமா செய்வோம்; அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நிதி மோசடி குற்ற விசாரணைப பிரிவை கலைத்துவிட வேண்டும் என்று கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பல அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளனர்.

இதில் பிரதியமைச்சர்கள் நேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கட சிறைச்சாலைக்கு சென்றனர்.

இதன் பின்னர் ஊடகங்களிடம்

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

பாரிய ஊழல் மோசடி, பொது வளங்கள் - சலுகைகள் மற்றும் அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டியுங்கள்

(கொழும்பு)

நாட்டின் சுதந்திர தினத்தை வட கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு வட கிழக்கு ஒருங்கிணைப்பு குழு கோரிக்கை விடுத்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

# திருப்பி அடிப்பேன்



(கொழும்பு)

பொறுமை காத்துக் கொண்டிருக்கும் தங்களை தொடர்ந்து தாக்கிக் கொண்டு வந்தால் திருப்பி அடிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மகி

23ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமை மீறல்கள் மீண்டும் ஏற்படாது-ரணில்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு மனித உரிமை மீறல் பிரச்சினைகள் மீளவும் ஏற்படாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஆசிய பிராந்திய வலய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு குறித்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது. இந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போது பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும். மனித உரிமை பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நல்லிணக்கம் மற்றும் பொறுப்பு கூறுதல் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள

23ஆம் பக்கம் பார்க்க


## எமது பயணத்தை தடுக்க முடியாது



23ஆம் பக்கம் பார்க்க

# ரூபாய் 5 கோடி பெறுமதியான தங்கம் கடத்திய பெண் கைது

## அதிகாலை 3 மணிக்கு பொலிஸார் அதிரடி



(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி- சங்கத்தானை பகுதியில் வைத்து ரூபாய் 5 கோடி பெறுமதியான 7 கிலோ தங்கக் கட்டிகள் மற்றும் ஒரு தொகை வெளி

24ஆம் பக்கம் பார்க்க

# கடற்படை அதிகாரியான யோஷித சிஎஸ்என் நிறுவன தலைவரானது எப்படி?

## இராணுவ நீதிமன்றிலும் அவரை முன்னிலைப்படுத்துங்கள்-அஜித்



(கொழும்பு)

சிஎஸ்என் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி லெப்.யோசித ராஜபக்ஷ இராணுவ நீதிமன்றிலும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், படைத்துறை சார்ந்த ஊழியர் ஒருவர் எவ்வகையிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவோ, வர்த்தக நிறுவனம் ஒன்றில் தலைமை அதிகாரியாக செயற்படவோ சட்டத்தில் இடமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல்

## சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்க மாட்டோம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் எந்த ஆட்சியிலும் நாம் இலங்கையின் சுதந்திரதின கொண்டாட்டங்களில் பங்கேற்க மாட்டோம் என தெரிவித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன், சுதந்திர தினத் தில் கலந்து கொள்வதா இல்லையா என்ற முடிவு தமது கட்சியில் இன் னமும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

நாளையதினம் நடைபெற வுள்ள இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு கலந்து கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலை யில் இது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் தரப்பு கடந்த பல தசாப்பதங்களாக இலங்கை யின் சுதந்திரதின நிகழ்வுகளை புறக்கணித்தே வருகின்றது. எமது மக்களின் அபிலாசைகள் உரி மைகள் மறுக்கப்பட்டு அடக்கபபட்டு வந்தமை தான் இதற்கு காரண மாகும். இந்த அடக்கு முறைகள் காலம் காலமாக ஏதோ ஒரு வகை யில் தொடர்ந்தே வருகின்றது.

மகிந்த ராஜபக்ஷ தலைமை யில் இருந்த சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, புதி தாக வந்தவர்கள் மீது அதிகளவு நம்பிக்கை வைத்து பெருமளவில் திரண்டு வாக்களித்தார்கள், ஆனால் அவர்கள் ஆட்சி ஏற்ற பின்னர் எமது மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இன்னமும் நடைபெற வில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் காணாமல் போனவர்களாகவே இருந்து வருகின்றனர். அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறை களுக்கு உள்ளேயே தொடர்ந்தும் உள்ளனர். காணிகள் விடுவிக் கப்படவில்லை, இராணுவ வெளி யேற்றம் நடைபெறவில்லை, இவ் வாறு கடந்த காலங்களில் இருந்து வந்த எமது மக்களின் பிரச்சினை இப்போதும் மாற்றங்களின்றி தொடர்ந்த வண்ணமே உள்ளது.

ஆகையால் நாங்கள் என்ன சாதித்து விட்டோம்? எங்கள் மக் களுக்காக என்னத்தை பெற்றுக் கொடுத்தோம் என்று இலங்கை யின் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொள்வது? ஆகையால் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் நாங்கள் இலங்கையின் சுதந்திர நிகழ்வு களில் கலந்து கொள்ளப்போவ தில்லை.

சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதா இல்லையா? என்ற முடிவு குறித்து இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த முடிவினையும் எடுக்கவில்லை. சிலர் கலந்து கொள்ளலாம். அது அவர்களது உரிமை. கருத்துக்கள் வெளியிடுவதும் அவர்கள் உரிமை. என்னை பொறுத்த வரையில் நான் கலந்துகொள்ள மாட்டேன்.

புதிய அரசாங்கம் தனது நல் லிணக்க நடவடிக்கைகளை செய லில் காட்ட வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் கூறிக் கொண்டு இருப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. வெறுமனே கருத துக்களுக்காக மட்டும் நாங்கள் சுதந்திர நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடி யாது என்றார் சிறிதரன். (செ-4)

JAFFNA COLLEGE
Primary School
Cordially Invites you to its
ANNUAL INTER HOUSE ATHLETIC MEET
to be held on
Wednesday 03rd February, 2016
at 1.30 p.m
Chief Guests:
Mr.Nobert Uthayakumar
(Divisional Director of Education, Chankanai)
&
Mrs.N.Anne Arunthavarany
Rev.Dr.D.S.Solomon — Principal
Mr.A.D.Athisayathasan — Supervisor
(C-3610)

## மீண்டும் நீராவி புகையிரதம்

(கொழும்பு)

உலகில் புகையிரத சேவை அறி முகமாகி தற்போது 200 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. ஆரம்பத்தில் புகையிர தம் நிலக்கரி மூலம் நீராவியில் இயங் கியது.

நாட்டில் உள்ள நீராவி ரயில் ஒன்று பல வருடங்களுக்கு பிறகு கொழும்பில் இருந்து பதுளை புகையிரத நிலையம் வரை நேற்று செவ்வாய்க்கிழமை சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இந்த புகையிரதத் தில் செல்வதற்கு மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர்.

நேற்று நடத்தப்பட்ட ரயில் சேவை யில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலரும் பயணம் செய்தனர். அட்டன் ரயில் நிலையத்தில் குறித்த ரயில் நிறுத்தி வைக்கப் பட்டபோது வெளி நாட்டு மற்றும் உள் நாட்டு சுற்றுலா பய ணிகள் ரயிலுடன் புகைப் படங்கள் எடுத்து மகிழ்ந்த னர். (செ-12)

## கரைச்சி பிரதேசசபை செயலர் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

இனந்தெரியாத 8 பேர் கொண்ட குழு தாங்கியதில் கரைச்சி பிரதேச சபையின செயலர் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி பொதுச் சந்தையின் நடுவே உள்ள மரமொன் றின் கீழே நிற்கின்ற 8 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த 15 நாட்களாக அங்கு வருகின்ற பெண்களுடன் சேட்டை செய்தலும், மது போதையில் அநாகரிகமாக நடந்து கொள்வதுமாக காணப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் நேற்று மாலை 6.30 மணி யளவில் சந்தையில் உள்ள போன் சொப்பின் உரிமையாளர் இது தொடர்பில் அவர்களுடன் வாக்குவாதம் செய்துள்ளார்.

நீ யார் எங்களை கேள்வி கேட்க என கூறி குறித்த போன் சொப்பின் உரிமையாளரை பொது மக்கள் மத்தியில் அக்குழுவினர் தாக்கியுள்ளனர்.

தற்செயலாக அவ்விடம் வந்த கரைச்சி பிரதேச சபை செயலர் இது தொடர்பில் அவர் களிடம் வினவ அவரையும் அக்குழுவினர் தாக்கியுள்ளனர்.


அவர் தனது தொலைபேசியில் அக்குழு வினரை படம் எடுத்துள்ளார். எனினும் அவர் கள் தொலைபேசியை பறித்து தங்களது புகைப் படத்தை அழித்ததோடு மீண்டும் அவரை கடுமை யாக தாக்கியுள்ளனர்.

இதன் போது தாக்குதலுக்குள்ளான கரைச்சி பிரதேச சபை செயலர் காயங்களுடன் அவ் விடத்திலிருந்து விலகிச் சென்று சம்பவம் தொடர் பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய துள்ளார். (செ)

All Subjects For
English Medium Students
Gr - 1-5
At 68, Potpathy Road, Kokuvil.
By :- Mrs.Pathmanathan
077 4935 999
(3475)

யாரிடம் பேசுவது?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......
எம்முடன் பேசுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK
(C-3608)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 04-01-2016 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கிருஷ்ணர் குணரத்தினம்

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நாளை 04.02.2016 **வியாழக்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் புனித தீர்த்தக்கரையில் கிரியைகள் நடைபெறும்.** அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற இருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்

மலையந்தோட்டம், கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

தகவல் :-
குடும்பத்தினர்.

(C-3613)

உ
சிவமயம்

## அகில இலங்கை இந்து மாமன்றம்

### கண்ணீர் அஞ்சலி



அகில இலங்கை இந்து மாமன்றத்தின பொதுச் செயலாளரும் எங்களின் அன்புச் சகோதரருமாகிய **கலாநிதி முத்தையா கதிர்காமநாதன** 02.02.2016-ல் இறையடி சேர்ந்துவிட்டார். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் வேதனையுடன் ஆழ்ந்த அனுதாபங்களை அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர் களுக்கும் தெரிவிப்பதோடு அவர்களின் துயரத்தில் நாங்களும் பங்குகொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வணங்கிப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.-

இந்த வார இறுதியில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சர்வதேச இந்து சகோ தரத்துவ மாநாட்டில் இடம்பெற இருந்த ஊர்வலமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறமாட்டாது.

இறைவழிபாட்டுடன் சிந்தனைக்களங்கள் மட்டும் நடக்கும். மாநாட்டு அரங்கிற்கு அமரரின் நினைவாக **கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அரங்கு** எனப்பெயரிடப்பட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில்
கந்தையா நீலகண்டன்
தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்

(C-3608)

## தேர்தல் சவால்களும் மாற்றங்களும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமை யாளர் சம்மேளனத் தின் ஏற்பாட்டில் தேர் தல் சவால்களும் மாற்றங்களும் எனும தலைப்பில் எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்ப கல் 3 மணிக்கு யூரோ வல் மாநாட்டு மண்ட பத்தில் கலந்துரை யாடல் நடைபெறவுள ளது.

இக் கலந்துரை யாடலின் வளவாள ராக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கலந்து கொள்ளவுள்ளார்.

இக் கலந்துரை யாடலில் ஆர்வலர் கள் அனைவரை யும் கலந்து கொள்ளு மாறு ஏற்பாட்டாளர் கள் கேட்டுக்கொண் டுள்ளனர். (செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# போதைப்பொருள் பாவனை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் 358 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும், ஆண்டொன்றில் இலங்கைக்கு 763 கிலோகிராமிற்கும் அதிகமான ஹெரோயின் தேவைப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஹெரோயின் விநியோகம் தொடர்பில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 49 ஆயிரத்து 823 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், 2014 ஆம் ஆண்டு 1964 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 569 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கஞ்சா விநியோகம் தொடர்பில் 2014ஆம் ஆண்டு 43 ஆயிரத்து 683 சந்தேகநபர்களும், 2015 ஆம் ஆண்டு 50 ஆயிரம் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சிறைச்சாலையில் உணவுகளை உட்கொள்ள மறுக்கும் யோஷித

(கொழும்பு)

விளக்கமறியலில் தடுத்து வைக் கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப் பினர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வரும் சிறைச்சாலை உணவுகளை உட்கொள்ள மறுப்புத் தெரி வித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் மூன்று வேளை உணவுகளையும் வீட்டில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அனுமதி கேட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் துஷார உபுல்தெனிய கூறியுள்ளார்.

முதல் தினம் அவர்கள் சிறைச் சாலை உணவுகளை பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்திருந்ததாகவும், அதனை புறக்கணித்ததன் பின்னர் அவர்களின் கோரிக்கை படி வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்து வழங்குவதற்கு சிறைச்சாலை திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டதாக வும்அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வடக்கிலுள்ள தமிழர்கள் பிரிந்து வாடி நினைப்பது தவறு

## அமைச்சர் சம்பிக்க அறிவுரை

(கொழும்பு)

**மலையக தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வதைப் போன்றே வடக்கில் உள்ள தமிழர்களும் வாழ வேண்டும். பிரிந்து வாழ நினைப்பது தவறு என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



அதேவேளை வெளிநாட்டில் உள்ள ஐ.எஸ்.பயங்கரவாதிகளை வைத்து இலங்கை முஸ்லிம்களை அச்சமூட்ட சிலர் முயற்சிப்பதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி உரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை சமஷ்டியாக மாற ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். வடக்கில் உள்ள தமிழர்கள், தெற்கில் சிங்களவர்களுடன் பிரிந்து வாழ நினைப்பது தவறு. இதை முன்னெடுத்த பிரபாகரனால் அதை நிறைவேற்ற முடியாது போனது.

மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வது போன்று வடக்கு தமிழர்களும் வாழ வேண்டும். அனைத்து இன மக்களும் தமது கலாசாரத்தை மதித்து வாழ சுதந்திரம் வேண்டும்.

கிறிஸ்தவ மக்கள் இந்த நாட்டில் வாழ அன்றைய சிங்கள மன்னர்கள் இடமளித்தனர். அதேபோல் முஸ்லிம் மக்களை போர்த்துக்கேயரிடம் இருந்து சிங்கள மன்னர்கள் பாதுகாத்தனர். அதனால் தான் அவர்கள் இந்த நாட்டிலே வாழ்கின்றார்கள்.

அத்தோடு சிங்களவர்கள் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவது, அடுத்தவர்களுக்கு நல்வாழ்வளிப்பதையே குறிக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (இ)

# பௌத்த பிக்குகள் சட்டமூலம் குறித்து பேச்சுக்கு மகாநாயக்கர்கள் இணக்கம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

தேரவாத பௌத்த பிக்குகள் சட்ட மூலம் தொடர்பிலான பேச்சுக்கு, மகாநாயக்கர்கள் இணக்கம்தெரிவித்துள்ளனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாதுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவலை பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை தேரவாத பௌத்த மத்திய நிலையமாக மாற்றுவதே தமது தேவையாக உள்ளது என்று குறிப்பிட்ட பிரதமர், பௌத்த மதத் தலைவர்களுடன் இணைந்தே இதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

தேரவாத சட்டமூலமானது பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் அமைந்துள்ளது என பல விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், அதனை மஹாநாயக்கர்களிடம் சமர்ப்பித்து ஆலோசனைகளை கேட்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த சட்டமூலம் தொடர்பான வரைபு மஹாநாயக்கர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதோடு, குறித்த சட்டமூலத்திற்கு வரவேற்பும் கிடைத்துள்ளது.

குறிப்பாக பௌத்த பிக்குகள் தொடர்பில் எழும் பல பிரச்சினைகள் மற்றும் விமர்சனங்களுக்கு குறித்த சட்டமூலம் சிறந்த முடிவாக அமையுமென்று மல்வத்து மஹாநாயக்கர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மஹா சங்கத்தினரும் குறித்த சட்டமூலத்தை வரவேற்றுள்ளனர். இந்தநிலையில், மஹாநாயக்கர்களுடன் பிரதமர் ரணில் மேற்கொள்ளும் பேச்சை அடுத்து குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# அரிசியில் இரத்தம்

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

சிவப்பு வர்ணச் சாயம் கலந்த சிவப்பு அரிசி மலையகத்திலுள்ள பெரும்பாலான நகரங்களில் விற் பனை செய்யப்பட்டு வருவதாகவும், பொது மக்கள் இது குறித்து அவ தானமாக இருக்குமாறும் நுகர் வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹற்றன் உள்ளிட்ட நகரங்களில் இவ்வாறான அரிசி விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. வர்ணச் சாயம் பூசி கலப் படம் செய்யப்பட்ட அரிசி மாதிரிகள் சந்தையில் உள்ளதா என்பது குறித்து அறிந்து கொள்வதற்காக நுகர் வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் நேற்று முன்தினம் ஹட்டன் உள்ளிட்ட நகரங்களில் திடீர் சோதனை செய்தனர். இதன் போது அரிசியில் சிவப்பு வர்ணம் கலக்கப்பட்டிருந்தமை கண்டறியப் பட்டுள்ளது.

இந்த அரிசியானது கல்முனை, அம்பாறை, சம்மாந்துறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். அரிசிகளை கொள்வனவு செய் யும்போது அவதானமாக இருக்கு மாறு கடை உரிமையாளர்களுக்கு நுகர்வோர் அதிகார சபை அதிகா ரிகள் பணித்துள்ளனர். கலப்படம் செய்த அரிசிகளை மக்கள் கொள் வனவு செய்து உட்கொள்ளும் போது பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இவ்வாறான அரிசிகளை கொள்வனவு செய்யும் போது மக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# இறுதிப்போரில் நிகழ்ந்தவற்றை அறியாதோரே இலங்கையின் யுத்திகள் குறித்து பேசுகின்றனர்

## துருக்கி தூதுவர் தெரிவிப்பு

இறுதிப் போரின் போது இலங்கை பின்பற்றிய உத்திகளைக் கையாளவேண்டும் என்று கூறுபவர்கள் இறுதிப் போரின்போது இங்கு நடந்தவை குறித்து போதுமான அறிவைக் கொண்டிராதவர்கள் என இலங்கைக்கான துருக்கி நாட்டுத்தூதுவர் டுன்ஜா ஒஷ்ஸுகதார் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை பிரச்சினைக்கு தீர்வு கண்ட வழியில் நாமும் தீர்வுகாண வேண்டும் என அவர்கள் எண்ணுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

போரின்போது இலங்கை பின்பற்றிய உத்திகளை துருக்கியிலும் பின்பற்ற வேண்டும் என துருக்கிய அரசியல்வாதியொருவர் தெரிவித்ததாக அண்மையில் ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்தி குறித்து வினவியபோதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (இ)

# இலங்கையரான ஐ.எஸ்.நபரைத்தேடி அவுஸ்திரேலிய பொலிஸார் வலைவிரிப்பு

(மெல்போர்ன்)

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரின் சுகாதார சேவைப் பிரிவின் பிரசார நடவடிக்கை ஒளிநாடாவில் இலங்கை யைப் பிறப்பிடமாகக் கொண்ட அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் நபர் தோன்றியமை தொடர் பாக அந்நபரைத் தேடி அவுஸ் திரேலிய பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

உனைஸ் முகமட் அமீன் (வயது- 41) என்ற நபரைத் தேடியே அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பிரஸ்தாப நபரின் முன்னாள் மனைவிகள் இருவரின் மெல் போர்னிலுள்ள வீடு களில் பொலிஸார் இந்த தேடுதல் வேட்டையை மேற் கொண்டுள்ளனர். எனினும் மேலதிக தகவல்களை வழங்குவதற் குப் பொலிஸார் மறுப்புத் தெரி வித்துள்ளனர்.

விளையாட்டுத்துறையில் பயிற்றுவிப்பாளர் பயிற்சி நெறி யில் டிப்ளோமா கற்கை நெறியை மெல்போர்னில் மேற்கொண்ட பிரஸ்தாப நபர் 2014ஆம் ஆண்டு மேமாதம் சிரியாவுக் குச் சென்றுள்ளார்.

ஆனால் மேற்படி வீடியோ வில் தான் ஒரு வைத்தியர் என பிரஸ்தாப நபர் காண் பிக்கிறார். அத்துடன் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் தம்முடன் இணைந்து பணியாற்றுவதாகவும் வைத் தியர் துறையில் குறைந்தபட்ச தகுதியுடைய சகோதர, சகோ தரிகளை தம்முடன் வந்து இணைந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தநிலையில் மெல் போர்ன் பொலிஸார் உஷார் நிலையில் உள் ளனர். (3)

# தேசிய கீதத்தில் பிரச்சினை வேண்டாம்

சுதந்திரதின கொண்டாட்டத்தின் போது தேசிய கீதத்தை சிங்களத்திலும் தமிழிலும் பாடுவது தொடர்பில் பிரச்சினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் எனவும் இதற்கு முன்னரும் சுதந்திரதினக் கொண்டாட் டங்களின் போது தேசிய கீதத்தை இரு மொழிகளிலும் பாடிய வரலாறுகள் உள்ளன என்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், 'சிங்களம் மற்றும் தமிழ் என்ற மொழிகள், இந்த நாட்டின் தேசிய மொழிகளாகும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ், தேசிய கீதத்தை அவரவர், தாங்கள் அறிந்த மொழிகளில் பாடும் உரிமையும் சுதந்திரமும் அவரவருக்கு உண்டு' என்றும் தெரிவித்தார். (இ)

# ஒலிம்பிக் போட்டியை தவிர்க்கும் மெஸ்சி




கால்பந்து போட்டியில் கொடி கட்டி பறக்கும் வீரர்களில் முக்கிய மானவர் ஆர்ஜென்டினாவின் லயோனல் மெஸ்சி.

இவர் பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் சுவாரஸ் மற்றும் நெய்மர் ஆகியோருடன் இணைந்து எதிரணிகளை கலங்கடித்து வருகிறார்.

இவர் ஆர்ஜென்டினா அணியின் அணித் தலைவராக இருந்து வருகிறார். இவரது தலைமையில் அந்த அணி உலகக்கோப்பை மற்றும் கோபா அமெரிக்கா கோப்பையில் இறுதிப்போட்டி வரை முன்னேறியது.

தற்போது அவருக்கு அதிகமாக போட்டி அட்டவணைகள் உள்ளது. இதனால் அவர் ஒலிம்பிக் போட்டியை தவிர்க்கும் எண்ணத்தில் உள்ளார் என்று அவரது பயிற்சியாளர் ஜெரார்டோ மார்ட்டினோ கூறியுள்ளார்.

இதுகுறித்து ஜெராட்டோ மார்ட்டினோ ஆர்ஜென்டினா வானொலியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், மெஸ்சி கோபா அமெரிக்காவின் நூற்றாண்டு தொடரில் விளையாடுவார்.

அதே சமயத்தில் பிரேசிலில் நடைபெறும் ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க மாட்டார் என்று தெரிவித்தார்.

மேலும், கோபா அமெரிக்கா, ஒலிம்பிக் மற்றும் உலகக்கோப்பை தகுதிச் சுற்று ஆகியவற்றில் செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் ஆர்ஜென்டினா அணி விளையாட இருக்கிறது. இதனால் இரண்டு தொடரில் ஒரே நேரத்தில் விளையாடுவது கடினமானது என்றார்.

ஏற்கெனவே, மெஸ்சி பார்சிலோனா அணிக்காக பல்வேறு தொடர்களில் விளையாட இருக்கிறார். (க)

# நீண்டகால தோழியை கரம் பிடித்தார் வருண்



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான வருண் ஆரோன் தனது நீண்ட கால காதலியை நேற்று முன்தினம் கரம பிடித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளராக இருப்பவர் வருண் ஆரோன்.

இவருக்கும், இவரது பள்ளி தோழியான ராஹினிக்கும் ஜாம் ஷெட்பூர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம்திருமணம்நடைபெற்றது.

தொடர்ந்து நாளை கிறிஸ்துவ முறைப்படி இவர்களுக்கு திருமணம் நடைபெற இருக்கிறது.

திருமணம் வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் 3-ம் திகதி தொடங்கும் ரஞ்சி டிராபியின் காலிறுதிப் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

சமீப காலமாகவே இந்திய அணி வீரர்களுக்கு திருமணம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# ஒருநாள் போட்டிகளில் திடீர் ஓய்வு? மனம் திறக்கிறார் யூனுஸ்கான்



பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான யூனுஸ்கான் ஒருநாள் போட்டிகளில் இருந்து திடீர் ஓய்வு பெற்ற தன் காரணம் குறித்து தற்போது விளக்கமளித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான யூனுஸ்கான், கடந்த நவம்பர் மாதம் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென்று அறிவித்தார்.

இந்த நிலையில் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றது குறித்து யூனுஸ்கான் தற்போது விளக்கம் அளித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தன் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்றும், ஒருநாள் போட்டிக்கு ஏற்ற வீரராக தன்னை கருதவில்லை எனவும் தெரிவித்த அவர்,

தாம் திடீரென ஓய்வு முடிவை அறிவிக்கவில்லைஎன்றும், தலைமை பயிற்சியாளர் வாக்கர் யூனுசுக்கு இதுகுறித்து தெரியும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீனியர் வீரரான தன்னை தெரிவு குழுவினர் ஒரு பொருட்டாக மதித்தது இல்லை என வருத்தம் தெரிவித்த அவர்,

தாம் ஏற்கெனவே ஓய்வு பெற விரும்பி இருந்ததாகவும், உலகக் கிண்ண ஆட்டங்களில் போதுமான வாய்ப்பு வழங்காததால் இந்த முடிவினை எடுக்க நினைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது டெஸ்டில் மட்டுமே விளையாடி வருவதாக தெரிவித்த யூனுஸ்கான், அதுவும் கவலை அளிக்கும் வகையில் உள்ளது என்றார்.

இதனால் சரியான தருணத்தில் டெஸ்டில் இருந்தும் ஓய்வு பெற இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் ஆலோசகராக ஷேவாக் நியமனம்



கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி வீரர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய அறிவுரையாளராக இந்தியாவின் முன்னாள் வீரர் வீரேந்திர ஷேவாக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் ஐ.பி.எல். போடடிகளுக்கென்றே தனி ரசிகர்கள் பட்டாளம் உண்டு.


இந்நிலையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விரிவுரையாளராக அதிரடி வீரர் வீரேந்திர ஷேவாக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தலைமை பயிற்சியாளரான சஞ்சய் பாங்கருடன் இணைந்து பணியாற்றுவார், அதுமட்டுமின்றி அணித்தேர்வு போன்ற விவகாரங்களிலும் ஆலோசனை வழங்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கிங்ஸ் லெவன் அணி பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர், ஷேவாக்கின் அனுபவம் மற்றும் அறிவு வலுவான அணியை உருவாக்கும், வீரர்களிடம் இருக்கும் சிறப்பான பண்புகளை வெளிக்கொணர்வார், இவர் இருப்பது அணிக்கு பக்கபலமாகும் என தெரிவித்துள்ளார்.

ஷேவாக் கூறுகையில், கிங்ஸ் லெவின் அணியின் தனது பயணத்தை தொடர்வது மகிழ்ச்சி அளிப்பதாகவும், புதிய தொடரை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க)

# வீரர்கள் ஒப்பந்தத்தில் இருந்து எனது பெயரை நீக்கியது பெரிய ஏமாற்றம் அளிக்கிறது - சமி



மேற்கிந்தியதீவுகள் அணியின் ஆல்ரவுண்டரும், இருபது-20 கிரிக்கெட் அணியின் அணித்தலைவராகவும் இருப்பவர் டரன் சமி. இவரது தலைமையில் மேற்கிந்திய தீவுகள் அணி இருபது-20 உலகக் கோப்பையை வென்று சாதனைப் படைத்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் வாரியம் வீரர்களின் ஒப்பந்த பட்டியலை வெளியிட்டது. இதில் டரன் சமி பெயர் இடம்பெறவில்லை. இது குறித்து சமி கூறுகையில், மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்த பட்டியலில் எனது பெயர் இடம் பெறாதது பெரிய ஏமாற்றம் அளிக்கிறது என்றார்.

இதுகுறித்து சமி கூறுகையில் கடந்த 8 ஆண்டுகளாக நான் வீரர்கள் ஒப்பந்த பட்டியலில் இடம் பிடித்து வந்தேன். தற்போது எனது பெயரை மேற்கிந்தியதீவுகள கிரிக்கெட் வாரியம் சேர்க்கவில்லை. இது பெரிய ஏமாற்றம். ஆனால், கிரிக்கெட் டரன் சமியை பற்றியல்ல. இது மேற்கிந்தியதீவுகள் மக்களுக் காக.

ஒப்பந்தத்தில் இடம்பெறாதது எனக்கு வருத்தம்தான். ஆனால், இது என்னுடைய முடிவல்ல. நான் இரண்டு வகையான (ஒருநாள் மற்றும் இருபது-20) போட்டிகளில் மேற்கிந்தியதீவுகள் அணிக்காக தொடர்ச்சியாக விளையாடி வருகிறேன். குறிப்பாக இருபது - 20 அணியின் அணித்தலைவராக இருக்கிறேன். இப்படி இருந்தும் என்னை நீக்கியது ஏமாற்றம் அளிக்கிறது என்றார். (க)

# கதிர்காமநாதனின் மறைவுக்கு யாழ். தமிழ்ச்சங்கம் அனுதாபம்

கொழும்புத் தமிழச்சங்கத் தலைவர் முத்தையா கதிர்காமநாதன் தனது 72 ஆவது வயதில் காலமானார் என்பது வேதனையைத் தருகின்ற செய்தியாக அமைந்துள்ளது. மக்கள் சேவையே தெய்வீகத் திருப்பணி என வாழ்ந்த இவர் அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளராகவும் முன்னணி சமூகத் தொண்டு அமைப்புக்களின் முன்னிலை உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தார்.

நயினாதீவு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர். தொழிலதிபராக விளங்கி சமூகப் பணிகளே வாழ்வில் மனநிறைவைத் தரும் என உணர்ந்து அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழத்தலைப்பட்டார். முழுநேரத்தமிழ்த்தொண்டனாகத் தன்னை ஆக் கிக் கொண்டார். தமிழியல் சார்ந்த இளையோரை வளர்ப்பதிலும் உலகளாவிய நிலையில் உள்ள தமிழ்ச்சங்கங்களுடன் உறவுகளைப் பேணுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக மூன்று தடவைகள் பதவி வகித்து அரிய தமிழ்த் தொண்டுகளை ஆற்றியுள்ளார். தமிழியல் சார்ந்து திருக்குறள் மாநாடு, உலகத் தமிழிலக்கிய மாநாடு எனப் பல நிகழ்வுகளை முன்னெடுத்த பெருமை அவரைச் சாரும். தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என்ற பாரதிதாசனின் வாக்கு இவருடனும் பொருத்திப் பார்க்கத்தக்கது.

அன்னாரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினருக்கும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினரின் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (இ)

# கதிரியக்க சக்தி கொண்ட அபூர்வ இரத்தினக்கல்

கதிரியக்க சக்திகொண்ட எக்கணைட் எனப்படும் அபூர்வ இரத்தினக்கல் ஒன்று வெளிமடையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது உலகின் மிகப்பெரிய எக்கணைட் கல் என கருதப்படுகிறது. இது இதற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்ட மாணிக்கம் கல்லை விட தோராயமாக மூன்று மடங்கு பெரியதாகும்.

அந்தப் பகுதி தொழிலதிபர் இதனை வாங்கியதாகவும். பளபளப்பான, கொரியா பாறைகள் காணப்படும் வெலிமடை பகுதியில் கிடைத்த இதை 7 துண்டுகளாக்க முடியும்.

1985 ஆம் ஆண்டில் 168 கரட் உடைய இவ்வகை கல் ஒன்று கிடைத்துள்ள அதே வேளை, இது 498 கரட் உடையது. தேன் நிறம் கொண்ட இக்கல்லின் 8 மில்லியன் கோடுகள் உள்ளதாகவும் உள்ளே எந்தவித error உம் இல்லாத வகையிலும் (error-free clear sound experience) அத்துடன் இக்கல்லுக்கு quality sapphire சான்றிதழும் வழங்கபட்டுள்ளது. (இ)

# புதிய கூட்டுப்படை தளபதியாக எயார் வைஸ்மார்ஷல் குருசிங்க



இலங்கை விமானப்படையின் புதிய கூட்டுப்படைத் தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சி.ஆர். குருசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் விமானப் படைக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த இவர் இதற்கு முன்னர். வவுனியா விமானப்படை முகாமில் அதிகாரியாகவும், இரத்மலான மற்றும் கட்டுநாயக்க முகாம்களில் பிரதான அதிகாரி யாகவும், வடக்கு விமானப்படை கட்டளைத் தளபதியாகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த வேண்டும்



வடமராட்சிப் பகுதிகளில் கட்டாக்காலிநாய்களின்தொல்லை மீண்டும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவற்றைக்கட்டுப்படுத்த பிரதேசசபை மற்றும் நகர சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கட்டாக்காலிநாய்களின்தொல்லை நெல்லியடி நகரப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துமாறும் பொது மக்கள் விடுத்த வேண்டுகோள் செய்தி கடந்த மாதம்4ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்தது. அச் செய்தியையடுத்து நெல்லியடி நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது வடமராட்சிப் பகுதிகளின் பல பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் வீதியில் நடமாடுவதற்கு அச் சப்படுகின்றனர்.

வீதியில் செல்வோரை இந் நாய்கள் துரத்தித் துரத்திக் கடிப்பதுடன் வீதி விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக காலை வேளைகளில் அதிகளவில் நாய்கள் வீதிகளில் கூடுகின்றன.

எனவே வீதிகளில் நின்று தொல்லை கொடுக்கும் இக் கட்டாக்காலி நாய்களை அப்புறப்படுத்துமாறு நகரசபை மற்றும் பிரதேசசபைகளிடம் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:5செவ் 2 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழீல்
தொ.இ: B/3681

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 29செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்8 ஆம் தரம் கட்டார்
தொ.இ: B/3686

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 44செவ் 4 இல்
உயரம்: 172cm
தகைமை/தெர்ழில்: BSC, MSC/ தொழிலதிபரும் இயக்குநரும்
தொ.இ: B/3687

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 49செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்
தொ.இ: B/262

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 40செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4231

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 17
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: NHD IT, BIT
தொ.இ: G/4232

பிறப்பு: 1981NON RC
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 43செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/சொந்ததொழில்
தொ.இ: G/4234

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 32செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HNDA, B.COM/ அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4239

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

03.02.2016
(தை 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
தசமி முன்னிரவு 11.07 மணிவரை
அனுசம் பிற்பகல் 4.21மணிவரை
சுபநேரம் 5.05-6.35மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி சந் | செவ் | குரு |

**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்.

**மேடம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், விரயங்கள் கூடும்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரி வீர்கள், வீட்டுப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆதரவு த முன்வருவர், எதிர்பார்த்த தொகை கள் வந்து சேரலாம், புதி முயற்சிகளில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை யடைவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி சேமிக்க நினைப்பீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடு வீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.


**விருச்சிகம்:** உறவினர் பகை அகலும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, அரசியல் வாதிகளால் அனுகூலமுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

# சிங்களவர்கள் சமஷ்டியை ஏற்க முன்வர வேண்டும்

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தனிநாட்டு கோரிக்கையிலிருந்து இறங்கி வந்து சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கின்ற போது, சிங்கள மக்களும் ஒற்றையாட்சி முறைமையில் இருந்து இறங்கி வந்து அனைவருக்கும் சமனான அதிகாரம் கிடைக்கும் சமஷ்டியை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டுமென தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினரும் சிரேஷ்ட பேராசிரியருமான சி.க சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் உப குழுவால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்வரைபு வெளியிடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பி.லக்ஸ்மன், கிழக்கு மாகாண இணைத்தலைவர் த. வசந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் முடிவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் செய்த தியாகம், அவர்கள் விடிவுக்காக உழைக்க வேண்டிய கடமையையும் கட்டாயத்தையும் எமது மக்களிடத்தில் சுமத்தியுள்ளது. மக்களுடைய தியாகத்திற்கு அவர்களுக்கான நியாயமான நீதியான நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு விடிவை தீர்வாக சமர்ப்பிக்க வேண்டிய கடமை இந்த தேசத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தமிழ் மக்களின் அரசியல் யாப்பிலே எத்தகையதான யாப்பு எமது மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வினை வழங்க முடியும் என்பதனை பொறுத்த வரையில் மாற்றுக்கருத்து இருக்க முடியாத ஒரு யாப்பு தான் சமஷ்டி யாப்பு. இதற்கு முன்னர் நாங்கள் பிரிந்து செல்வதனை விட சமஷ்டி அடிப்படையிலே வருகின்ற இந்த யாப்பு,

எல்லோரினையும் இணைத்து சம பங்காளிகளாக்குகின்ற ஒரு யாப்பு தான் இது, இந்த சமஷ்டி என்ற பதத்தை முதன் முதலில் பிரயோகித்தவர்கள் தமிழர்கள் அல்லர். சிங்கள மக்கள் தான் உபயோகித்தவர்கள் அதுவும், தனிச்சிங்களத்தை கொண்டு வந்த பண்டாரநாயக்க, கனடியர்களும் சமஷ்டி என்ற பதத்தை மிக பிரபல்யமான பதமாக சுதந்திரம் கிடைக்கும் வரையில் பயன்படுத்தி உள்ளார்கள்.

இவர்களுடைய கோரிக்கையிலே மத்திய கண்டிப் பகுதி ஒன்று கரையோரப் பகுதி ஒன்றும் வடக்கு, கிழக்கு இணைந்தது தமிழர் தாயகம் என்று மூன்றினையும் முன்னிறுத்தி உள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அலகிலே பிராந்தியங்கள் வந்துள்ளன.

எங்களை பொறுத்தவரையிலே இன்றைய தீர்வு நாங்கள் தனிநாட்டு கோரிக்கையில் இருந்து இறங்கி சமஷ்டி கோரிக்கைக்கு வந்துள்ளோம். இதனை சிங்கள மக்களும் உணர்ந்து ஒற்றையாட்சி அமைப்பில் இருந்து, கீழிறங்கி எல்லா மக்களையும் எல்லா தேசிய இனங்களையும் இணைக்கின்ற ஒரு சமஷ்டி அமைப்பிற்கு அவர்கள் வர வேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள புத்திஜீவிகள் மட்டுமல்ல அரசியல் கட்சிகள் சமஷ்டி என்பது தமிழ் மக்களுக்கு மட்டும் அதிகாரத்தை கொடுப்பதல்ல, அனைத்து மக்களுக்கும் அதிகாரத்தை கொடுப்பது என்பதனை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். சமஷ்டி தமிழர்களுக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்கி விடும் என்ற தவறான தகவல் களையப்படவேண்டும்.


சம பங்காளிகளாக மக்கள அனைவரும் இருக்கும் போது வெளிப்படையான ஊழல் அற்ற நிர்வாகம் அமையும் என்பதனை தெட்டத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு சிங்கள மக்களிடத்தில் உண்டு. அரசியல்வாதிகள் இத்தகைய புரிதலை விரும்பவில்லை.

தங்களுடைய செல்வாக்கும் அதிகாரமும், அரசியல் இலாபமும் போய்விடும் என்பதே இந்த விரும்பாமைக்கு காரணம் ஆகும். சமஷ்டி அரசியல் திட்டத்திலே மத்திய மாகாண அரசுகளுக்கிடையில் உள்ள திட்டங்கள் சரியாக வரையப்பட்டு இருக்கும். அதனை ஒருவர் பறிக்கவோ நீக்க முடியாத நிலை ஏற்படும்.

தமிழ் மக்கள் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பங்காளிகளாக, தேசிய அரசினை தீர்மானிக்கும் பங்காளிகளாக மாற்றும் மாநிலத்திலே சுய ஆட்சி மத்தியிலே கூட்டாட்சி என்ற முறைமையை கொண்டு வருவது தான் சமஷ்டி ஆட்சி என்றார் சிற்றம்பலம்.(இ-4)

# புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதே பிரதான நோக்கம்

## விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்த ஒரு சமஷ்டியின் கீழ் அதிகாரத்தை பங்கீடு செய்வதற்கான புதியதொரு அரசியல் கலாசார மரபை உருவாக்குவதே தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபின் மிக பிரதானமான நோக்கமாகும் என யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும், பேரவையின் உறுப்பினருமான கே.ரி.கணேசலிங்கம தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் உப குழுவால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்வரைபு வெளியிடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பி.லக்ஸ்மன், கிழக்கு மாகாண இணைத்தலைவர் த. வசந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் முடிவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரைபு பெருமளவில் தனக்குள் உள்ளடக்கி உள்ள உத்திகள் ஒவ்வொன்றும் இந்த மாநில அரசின் பட்டியல்கள், மத்திய அரசினது பட்டியல்களை தெளிவாக வரையறை செய்துள்ளது. ஏறக்குறைய பட்டியல்கள் ஒவ்வொன்றும் மக்களிடம் கையளிக்கப்படும், மாநில அரசினது பட்டியல்களை தெளிவாக ஐம்பத்து நான்கு அலகுகளில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இவை ஒவ்வொன்றும் மக்களுடைய எண்ணங்களுக்கும் ஆய்வுகளுக்கும் முன்வைக்கப்படும். அதே போன்று மத்திய நிரல் பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. அதில் ஏறக்குறைய 37 அம்சங்களை உள்ளடக்கி உள்ளது. இவை ஒவ்வொன்றும் மத்திய அரசோடு நாங்கள் எந்த விடயங்களில் விட்டுக்கொடுப்பை, புரிந்துணர்வை, பொருளாதாரம் சார்ந்த, தேசிய பாதுகாப்பு சார்ந்த தேசிய ரீதியான அம்சங்களை மட்டும் மத்திய அரசு முதன்மைப்படுத்தும் விடயங்களை அல்லது மத்தியிடம் ஒப்படைக்கும் விடயங்களை பட்டியல் படுத்தியுள்ளோம். அதேபோன்று சர்வதேச மட்டத்தில் நாடுகளில் உள்ள சமஷ்டியின் சிறப்புக்கள் உள்வாங்கப்பட்டு, அவற்றினுடைய பதிவுகள் உள்வாங்கப்பட்டு தமிழ் மக்கள் பேரவையின் வரைபில் உள்வாங்கப்பட்டுள்ளது. எமது வரைபு மக்கள் பார்வைக்கு வழங்கப்பட்ட பின்னர வழங்கப்படும் அபிப்பிராயங்களை பொறுத்து வரைபில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும தெரிவித்தார். (இ-4)

# செய்தித் துளிகள்

## ஒரு கோடி ரூ.இழப்பீடுகோரி குடும்பப்பெண் மனுத்தாக்கல்

எம்பிலிப்பிட்டியவில் பொலிஸாரினால் மாடியில் இருந்து கீழே தள்ளப்பட்டு மரணமானவரின் மனைவி, அடிப்படை உரிமைமீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இதன்படி தமக்கு ஒரு கோடி ரூபா இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமது கணவரை பொலிஸாரே கொலை செய்தனர் என்று தொடர்ந்தும் குறித்த பெண் குற்றம் சுமத்தி வருகிறார்.

இந்தநிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் பொலிஸ் அதிகாரிகளை கைது செய்யுமாறு நீதிமன்றம் ஒரு வாரத்துக்கு முன்னர் உத்தரவிட்டுள்ளது. எனினும் அவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கொழும்பு வைத்தியசாலையில் பெண்ணொருவர் தற்கொலை

மாளிகாவத்தைப் பிரதேச மத்திய கொழும்பு வைத்தியசாலை மலசலக்கூடத்தில் பெண்ணொருவர் தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 67 வயதான குறித்த பெண் சிகிச்சைக்காகவே இந்த வைத்தியசாலைக்கு வந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பெண்ணுக்கு, அதிகமாக இரத்தக் கொதிப்பும் நீரிழிவு நோயும் காணப்பட்டதாகவும், இதனால் மன உளைச்சலுக்கு ஆளானதால் குறித்த பெண் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிவித்துள்ளதோடு இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.(இ)

## இந்திய உடன்படிக்கைக்கு இலங்கையில் கடும்எதிர்ப்பு

இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ள பொருளாதார மற்றும் தொழிலநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கு இலங்கையில் தொடர்ந்தும் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகிறது.

இதன்ஒருகட்டமாக நேற்று ஒன்றிணைந்த பொறியியலாளர் சங்கம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

மருதானை கோட்டை போன்ற பகுதிகளில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தியாவுடனான இந்த உடன்படிக்கை மூலம் இலங்கையில் உள்ள பல்வேறு துறைசார் பணியாளர்கள் பாதிக்கப்படவிருப்பதாக அந்த துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வாகன விபத்தில் பெண் பலி

சபுகஸ்கந்த - கோனவல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சபுகஸ்கந்த பகுதியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளில் மோதுண்டு குறித்த பெண் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

அவர், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதித்த பின்பே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, சந்தேக நபரான மோட்டார் சைக்கிள் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சபுகஸ்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## முள்ளம்பன்றி வேட்டையாடிய சிறுவன் பொலிஸாரால் கைது

இறைச்சிக்காக முள்ளம் பன்றியொன்றை இரும்புக் கம்பியால் அடித்துக் கொன்றுவிட்டு அதைக் கொண்டு வந்திருந்ததாகக் கூறப்படும் 17 வயதுடைய சிறுவன் ஒருவனை திருகோணமலை, மொறவெள காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர் இரவு நேரங்களில் தொடர்ச்சியாக மிருகங்களை வேட்டையாடி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, குறித்த காட்டுப்பகுதிக்குச் சென்று சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்டனர். இதன் போது, இரும்புக் கம்பி மற்றும் வேட்டையாடப்பட்ட முள்ளம்பன்றியுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு



தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு 31.01.2016 அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

(தொடர்ச்சி...)


மேலும் இவ்வுடன்படிக்கையானது பொறுப்புக்கூறல் மற்றும் நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளின் விடுவிப்பு, காணாமல் போகச் செய்யப்பட்டோரின் பிரச்சினைகள், இராணுவமய நீக்கம், அரசால் செய்யப்பட திட்டமிட்ட குடியேற்றங்கள், பாதுகாப்பு துறை மறுசீரமைப்பு, குற்றங்கள் மீள நிகழாமை தொடர்பான உறுதியளிப்பு தொடர்பிலானவை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் உடன்பாடுகளை எட்டிய ஓர் உடன்படிக்கையாக இருக்க வேண்டும். மேற்சொன்ன விடயங்களில் முன்னேற்றம் இல்லாமல் அரசியலமைப்பு விவகாரங்களை பற்றிய திறந்த பாதுகாப்பான உரையாடல் ஒன்று வடக்கு கிழக்கில்நடைபெறமுடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் தேசத்தின் பாரம்பரிய தாயக மாக இருக்கும் காரணத்தி னால் அதன் ஆட்புல பரப்பாக அமையப் பெறும்.

1.4. தமிழ் மக்கள் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணயஉரிமையைக்கொண்ட மக்கள் கூட்டமாவர். தனது சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரிக்கும் இடத்து பிளவுபடாத ஒற்றுமையான இலங்கை அரசிற்கு தமிழ் மாநில அமைச்சரவையாலும் அரசியலமைப்பில் விதந்துரைக்கப்படுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப பிரயோகப்படுத்தப்படும்.

2.4. நீதித்துறை சார் இறைமை அதிகாரங்கள் அரசியலமைப்பு நீதிமன்றத்தாலும் மத்திய, மாநில நீதித்துறையாலும் அவற்றுக்கென விதந்துரைக்கப்பட்ட நியாயாதிக்கங்களுக்கு ஏற்றவாறு பிரயோகிக்கப்படும்.

2.5. இவ்வரசியலமைப்



யது.

3. அரசியலமைப்பின் மீயுயர்வுத் தத்துவம்

மத்தியினதும் மாநிலத்தினதும் அதியுயர் சட்டமும் அத்திபாரமுமாக அரசியலமைப்பு இருக்கும். மத்தியினதும் மாநிலத்தினதும் அனைத்து செயற்பாடுகளும் அரசியலமைப்போடு இயைந்ததாக இருத்தல் வேண்டும்.

4. மொழி, மதம், பிரஜாவுரிமை மற்றும் அடிப்படை உரிமைகள்

4.1. இலங்கை ஒரு மதச்சார்பற்ற குடியரசாக இருக்கும். அரசு அனைவரினதும் விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை மதிப்பதோடு எல்லா மதங்களையும்சரிசமனாக நடத்தும்.

4.2. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியன அரசின் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கும்.

4.3. வடக்கு கிழக்கில் தமிழும் ஏனைய இடங்களில் சிங்களமும் நீதிமன்ற

இருக்கும்: மத்தி மற்றும் மாநிலம்.

5.3. சமஷ்டியின் கூறுகளாக மாநிலங்கள் இருக்கும். அத்தகைய மாநிலங்களில் ஒன்றாக தற்போதைய 1978 அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை கொண்ட வடக்கு கிழக்கு மாநிலம் அமையப் பெறும்.

5.4. மத்திய அரசாங்கமானது வெஸ்ட்மினிஸ்ரர் முறையிலான ஆட்சி முறையில் இருத்தல் வேண்டும்.

5.5. அரசாங்கத்தின் இரு மட்டத்திலும் உள்ள தேர்தல் முறைகள் ஜேர்மனியில் இருப்பது போன்ற கலப்பு தேர்தல் முறையை பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

5.6. சமஷ்டி அரசின் ஜனாதிபதி பாராளுமன்றின் இரண்டு அவைகள் மற்றும் மாநிலங்கள் அவையின் உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் கல்லூரி யொன்றினால் தெரிவு செய்யப்படுவார்.

5.7. தத்தமது சட்ட வரை

எதுவாயினும் அது தொடர்பில் அவர்களுடன் கலந்தாய்வு செய்யத் தயாராக இருக்கின்றோம் என பற்றுறுதியுடன் கூறிக் கொள்கிறோம்.

ஆ) வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள பிரஜைகள் யாவரும் அரசியலமைப்பில் உள்ள உரிமைகள் யாவற்றினையும் வடக்கு கிழக்கில் அனுபவிக்கும் உரித்துடை யவர்கள் ஆவர். மேலும் வடக்கு கிழக்கு மாநிலத்தால் மேலதிகமாக வழங்கப்படும் மனித உரிமைப் பாதுகாப்பு அவர்களுக்கும் உரித்துடையதாக இருக்கும்.

இ) அதேவேளையில் தமது வாழ்விடங்களில் அவர்களது ஒன்றுபட்ட அக்கறையை பாதுகாப்பதற்கான அமைப்பு முறைசார் உரிமைகளுக்கான வழிமுறைகளை நோக்கிய மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்கான எமது அர்ப்பணி

## அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கான வரைபு முன்மொழிவுகள்

1. இலங்கை அரசின் தன்மை

1.1. இலங்கை ஓர் பல்-தேசிய, பல்-கலாசார, பன்மொழித்துவ, பல்-மத அரசாகும். அது தனது அங்கத்துவ மக்கள் கூட்டங்களையும்[2], சமூகங்களையும் கொண்டமைந்தது ஆகும். மத்தியும் மாநிலங்களும் மக்கள் கூட்டங்களின், சமூகங்களின் பன்மைத்துவத்தை மதித்து, அங்கீகரித்து, பாதுகாக்கும் கடப்பாட்டை கொண்டவை.

1.2. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் ஏனைய சமூகங்கள் பல்-தேசிய இலங்கையை உருவாக்குகின்றன.

1.3. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்ட மக்கள் தமது பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றனர்.

2. இறைமை

2.1. இறைமை தனித்துவமான மக்களுக்குரியதும் பாரதீனப்படுத்த முடியாததும் ஆகும். முழு சமஷ்டி அரசின் இறைமையும் அதன் அங்கத்துவ மக்கள் கூட்டங்களின் இறைமை மூலம் உய்த்தறியப்படுவதாகும்[3].

2.2. சட்டவாக்க இறைமையானது மத்திய பாராளுமன்றத்தாலும் மாநில சட்டவாக்க அவைகளாலும் தமக்கென அரசியலமைப்பால் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலமாக தனித்துவமாக பிரயோகிக்கப்படும்.

2.3. நிறைவேற்று அதிகார இறைமையானது மத்திய அரசாங்கத்தின் பிரதமராலும் அமைச்சரவையாலும் மாநில அரசாங்கத்தின் முதலமைச்சராலும் பால் விதந்துரைக்கப்படும் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் மத்திய மாநில அரசாங்கங்கள் மதித்து, பாதுகாத்து அவை மக்களால் அனுபவிக்கப்படுவதை உறுதி செய்யப் படுதலும் வேண்டும். மத்தியாலோ மாநிலத்தாலோ அரசியலமைப்பால் விதந்துரைக்கப்பட்ட வழிகளால் அன்றி அடிப்படை உரிமைகள் சுருக்கப்படவோ, நிராகரிக்கப்படவோ, மட்டுப்படுத்தவோ முடியாது.

2.6. வாக்குரிமையானது மத்திய பாராளுமன்றம், மாநில சட்டவாக்க சபை தேர்தல்களிலும், பொது ஒப்பங்கோடல்களிலும் 18 வயது நிரம்பிய ஒவ்வொரு பிரஜைக்கும் உரியதாகும்.

2.7. ஒவ்வொரு மாநில அரசும் தனது மாநிலத்திற்குட்பட்ட சிறுபான்மையினரது அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் கடப்பாடுடை மொழியாகவும் பொது ஆவணங்களின் மொழியாகவும் இருக்கும்.

4.4. தமது மொழி, நிர்வாக மொழியாக இல்லாதவிடத்தும் அனைத்து பிரஜைகளும் தமது மொழியில் நீதிமன்றத்தையும்பொதுச்சேவையையும் பெற்றுக் கொள்ள உரித்துடையவர்கள் ஆவார்கள்.

5. ஆட்சி முறைமை

5.1. இலங்கை ஓர் சமஷ்டி குடியரசாக இருக்கும்.

5.2. அதில் இரண்டு மட்டத்திலான அரசாங்கம் யறைகளின் ஊடாக மாநிலங்கள் தமது ஆட்சி முறைகளை சமஷ்டி அரசியல மைப்போடு முரண்படாத வகையில் உருவாக்கிக் கொள்ளலாம் .

குறிப்பு:

அ) வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தனித்துவத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். முஸ்லிம் சமூகத்தால் இணைந்த வடக்கு கிழக் கில் தமது குழு சார் உரி மைகளை நிறுவன ரீதியாக பாதுகாப் பதற்கு எடுக்கும் முன் வைப்பை நாம் வெளிப்படுத்துகின்றோம்.

இது தொடர்பில் மலையக அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூகங்களுடனும் வேலை செய்வதற்கு நாம் முழு மையாக எம்மை அர்ப்பணிக்கின்றோம்.

மத்திய மட்டத்திலான பகிரப்பட்ட ஆட்சி

6. இரண்டாவது அவை

6.1 செனட் என்று அழைக்கப்பட வேண்டிய இரண்டாவது அவையில் அனைத்து மாநிலங்களும் சமமான பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கும்.

ஒவ்வொரு மாநில சட்டவாக்க சபைகளும் விகிதாசார வாக்கு அடிப்படையில் தலா 9 உறுப்பினர்களை செனட் அவைக்கு தெரிவு செய்யும்.

(தொடரும்)

[2] அங்கத்துவ மக்கள் என்ற சொற்பாவனை உதாரணமாக பொஸ்னிய அரசியலமைப்பில் உண்டு. தனித்துவமான தேசம் என்ற சொற்பாவனை கனேடிய அரசியலமைப்பு பாரம்பரியத்தில் உண்டு.

[3] தமிழர்களை பொறுத்த வரையில் தேசத்தின் ஆட்புல பரப்பும் மாநிலத்தின் ஆட்புல பரப்பும் ஒன்றாகும். மற்றைய மாநிலங்களின் ஆட்புலப்பரப்புகள் எவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் நாம்இங்கு கருத்துரைப்பதை தவிர்க்கின்றோம்.

# "போரைவிடக் கொடியது போதை" என புதுக்குடியிருப்பில் ஜனாதிபதி கூறி அரைமணி நேரத்தில் மதுபானசாலை திறப்பு

## உடன் அகற்றுமாறு மாகாண சபை உறுப்பினர் கடிதம்

(முல்லைத்தீவு)

**போரைவிடக் கொடியது போதை என புதுக்குடியிருப்பில் அண்மையில் ஜனாதிபதி உரையாற்றி முடித்து அரைமணி நேரத்திற்குள் முல்லைத்தீவு நகரில் மதுபா்ன சாலை திறக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு நகரின் மையப் பகுதியில் குடியிருப்புக்களை அணடியும் சிறுவர் பூங்கா உட்பட பல அத்தியாவசிய இடங்களுக்கு மிக அருகாமையிலும் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலை உடனடியாக அந்தப பகுதியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 24ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் ஜனாதிபதி புதுக்குடியிருப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது "போதை போரை விடக்கொடியது" என்று கூறிய அரை மணிநேரத்தில் முல்லைத்தீவு மணற்குடியிருப்பில் இம் மதுபானசாலை திறக்கப் பட்டுள்ளது.

இதற்கு மிக அருகாமையில்சிறுவர் பூங்கா அமைந்துள்ளது. இந்த இடத்தில் மாலை நேரத்தில் பெறறோர்கள தங்களுடைய பிள்ளைகளை அழைத்து வந்து மகிழ்வூட்டும் இடமாகும். முல்லைத்தீவு பகுதியின் சுற்றுலாப பகுதியாகவும இப்பகுதி காணபடுகிறது.

இதை விட சைவ, கத்தோலிக்க, இஸ்லாம் ஆகிய மத அமைவிடங்களுடன் சுனாமி நினைவாலயம், சிறுவர் முன்பள்ளி மற்றும் கச்சேரி என்பவை 500 மீற்றர் தூரத் திற்குட்பட்டதாக இருக்கின்றது.

இது விடயத்தில் பொது அமைப்புக்களான மணற்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், புனித பேதுரு ஆலய பங்குத்தந்தை வண்ணாங்குளம் மாதர்கிராம அபிவிரு த்திச்சங்கம், வண்ணாங்குளம் சென் யூட்ஸ் கடற்தொழில் அமைப்பு, சென் மேரிஸ் கிராமிய கடற்றொழில் அமைப்பு, மஃறூப் சுபஹனி ஜூம் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, கோயிற் குடியிருப்பு மாதர்கிராம அபிவிருத்திச்சங்கம், நெய்தல் கல்வி நிலையம் ஆகியன தங்களுடைய அங்கத்தவர்கள், பெற்றோர்கள், மாணவர்களின் கையொப்பங்களுடன் இவ்விடயத்தை எனக்கும் தெரியப் படுத்தியுள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பாக கவ னம எடுக்கப்பட்டு அந்த இடத்திலிருந்து மதுபானசாலை அகற்றபபட வேண்டும் என மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி, மேற்படி மதுபானசாலை உடனடியாக அகற்றப்படவேண்டுமென பாராளுமன்றில் கோரிக்கை விடுத் திருந்தமை குறிப்பிடத்தக்கது.(2-4-281)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வித்தியாலயத்தின் பழைய மாணவனும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் வ.சுரேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொ்ள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் ஆ.ஆலாலசுந்தரம்,வடமாகாண விலை மதிப்பீட்டுத் திணைக்கள உதவி விலை மதிப்பீட்டாளர் ப.பகீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)




## ஈழத்தை மையமாகக் கொண்டு "1000 கவிஞர்கள் கவிதைகள்"

உலக கவிதைகள் வரலாறறில் ஒரு பொக்கிஷ ஆவணமாய் உலா வரவிருக்கின்றது "1000 கவிஞர்கள கவிதைகள்" எனும் கவிநூல். அவனியின் அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழ்க் கவிஞர்களின் தரமிகு கவிதைகளின் தொகுப்பாய் முகம் காட்டவிருக்கும் "1000 கவிஞர்கள் கவிதைகள்" நூலில் தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்படும் கவிதைகள் இடம்பெறும். ஈழத்தினை மையமா கக் கொண்டு செயலாற்றும் இக்குழுமத்திற்கு உறுதுணையாக எல்லா நாடுகளிலுமசெயலாற்றுநர்களும், கவிச் சேகரிபபாளர்களும் இயங்குவர். இப்பெரு கவித் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழாவானது தேர்வுக்குழுவினரால் தீர்மானிக்கப்படும் இடத்தில் ஒழுங்கு செய்யப்படும்.

கவிதைக்கான நிபந்தனைகள் வருமாறு,

எவ்வகையான கவிதைகளும் ஏற்கப்படும். கருப்பொருளுக்கு வ்ரையறை இல்லை, கடசிசார், சமூகத்தால் விரும்பப்படா தனிநபர் புகழ்ச்சிசார் கவிதைகள் ஏற்கப்படமாட்டாது, கவிதையின் ஆகக்கூடிய வரிகள் 35 ஆகும். இவ்வரிகளுக்கு குறைவாகவும் கவிதைகள் அனுப்ப முடியும். ஒருவர் ஒரு கவிதையே அனுப்ப முடியும். ஒன்றிற்கு மேற்பட்ட கவிதைகளினை அனுப்பி தேர்வுக் குழுவின் விருப்பிற்கு ஒரு கவிதையை ஏற்கச் செய்யவும் அனுமதி உண்டு, பங்கேற்கும் கவிஞர் கடவுச் சீட்டு அளவான புகைப்படம் மற்றும் அவர் சார்ந்த 70 சொற்களுக்குட்பட்ட சுய குறிப்பினையும் இணைத்து அனுப்பலாம், இக்குறிப்பிலேயே முகவரியும் உள்ளடங்கும், மேலதிக விடயங்களுக்கான தொலைபேசி எண்கள். இலங்கை 077 589 2351/ 077 500 6796/ 077 340 7243 சர்வதேசம் 00141 6666 1855, கவிதைகளை tamilkavithaikal1000@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலியக்குநர், 1000 கவிஞர்கள் கவிதைகள், விஜய் அச்சுப் பதிப்பகம், மில் வீதி, வவுனியா, இலங்கை என்ற முகவரிக்கோ அனுப்ப முடியும். கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதியாகும், கவிதையை அனுப்பும் கவிஞர் தாம ஒரு படைபபாளர் என்பதனையும், அக் கவிதை தமது சுய கவிதை என்பதனையும் சமூகத்தால் ஏற்கப்படக் கூடிய ஒருவ ரின்உறுதிப்படுத்தலுடன் அனு ப்புதல் விரும்பத்தக்கது. (3)

## வவு.கந்தசுவாமி கோவில் மஹா கும்பாபிஷேகம்

(வவுனியா)

வவுனியாஸ்ரீகந்தசுவாமிகோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன சப்தாதச குண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6மணிமுதல் மாலை 7மணி வரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும்.எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4மணிக்கு மஹாபிஷேகம், விஷேட பூஜை, வசந்த மண்டபப் பூஜை,சுவாமி திருவீதி யுலா மற்றும் பிரசாதம் வழங்கல் என் பன இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 25 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (3)

## கிளிநொச்சியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை

### இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும்



வன்னிப் பிரதேச மாணவர் களின் நன்மை கருதி கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு அருகில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையொன்று புதிதாக நிறுவப்பட்டு வருகிறது.

மேற்படி பாடசாலையின் கட்டு மானப பணிகள் கலாநிதி ஆறு. திருமுருகனின மேற்பார்வையில் இடம்பெற்று வருகின்றன.

இம்மாத இறுதி வாரத்தில் இப்பாடசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுளளமை குறிப்பிடததக்கது. (2)

## சங்கங்களின் வளர்ச்சிக்கு நிதியுதவி செய்யுங்கள்

### முல்லை.கிரா.அபி.உத்தியோகத்தர் வேண்டுகோள்

(முள்ளியவளை)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின் கடந்த வருட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து பெருமளவான நிதியை முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் நலத்திட்டங்களிற்காக ஒதுக்கியுள்ளார் என முல்லை. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.திலீபன் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணசபைஉறுப்பினர் க.சிவநேசனின் 2015ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியொதுக்கீட்டின் மூலம் உப்புமாவெளி கிராம அலுவலர் பிரிவின் மாதர்,கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 20 அடி தகரக் கொட்டகை ஒன்று கடந்த 28ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில்,

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் முல்லைத்தீவு மாவட்டத்தின் நலத்திட்டங்களுக்கு தனது நிதியிலிருந்து உதவிகளை வழங்கியுள்ளார். 2016ஆம் ஆண்டு நிதியிலிருந்து கிராம,மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வளர்ச்சிக்காக அதிகளவிலான நிதியை ஒதுக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-302)

## 16 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு

(வற்றாப்பளை)

தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில்முல்லைத்தீவுமாஞ்சோலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழுந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி தீக்காயங்களுக்கு உள்ளான முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ற.பிரதீபா என்ற ஒரு குழந்தையின் தாயாரான பிரஸ்தாபப் பெண், மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் 16நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளின்பின்னர்உயிரிழந்த குடும்பப் பெண்ணின் சடலம் உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது.(2-310)

## 8ஆம் வாய்க்கால் சனசமூக நிலையம் பாவனைக்கு எப்போது திறக்கப்படும்?



(புதுமுறிப்பு)

உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டடம் பூரணப்படுத்தப் பட்டுள்ள நிலையிலும் அதனை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப் படாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சனசமூக நிலையத்திற்கான வேலைகள் முடிவுற்று ள்ள போதும் கட்டடத்தைச் சூழவுள்ள பகுதிகள் துப்புரவு செய்யப்படாமலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்படாமலும் காணப்படுகின்றது.

மேலும் மேற்படி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் வாசிப்பில் ஆர்வமுள்ளவர்களாக உள்ளநிலையில் சனசமூக நிலையத்தை விரைவாக தமது பாவனைக்கு உட்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-307)

## சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து 119க்கு முறைப்பாடு செய்யுங்கள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் அறிவுறுத்து

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் ஏனைய சட்டவிரோதமான செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச பொலிஸாருக்கு அறிவித்தும் எது விதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையெனில் உடனடியாக 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டு முறைப்பாடுகளை மேற்கொள்ளுங்கள் என வடக்கு மா காண சபை முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் க.சிவநேசன் பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முள்ளியவளை வடக்கு பிரதேச மக்களை கடந்த 30ஆம் திகதி பிற்பகல் 4மணியளவில் முள்ளியவளை வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து சந்தித்தபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அச்சந்திப்பிற்கு வருகை தந்த சில பொதுமக்கள் தமது பிரதேசத்தில் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியாளர்களின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாகவும் தாம் பொலிஸாரிடம் இது தொடர்பில் முறையிட்டும் அவர்கள் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் தெரிவித்த முறைப்பாட்டிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேற்படி சந்திப்பில் முள்ளியவளை வடக்குப் பிரதேச மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினரிடம் எடுத்துரைத்து இருந்தமை குறிப்பிடத் தக்கது. (2-310)

# பயணிகள் தமது கருத்துக்களை வழித்தடங்களுக்கு பொறுப்பானவர்களின் கவனத்திற்கு அறிவிக்க முடியும்

## மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகம் அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகத்தின் நடவடிக்கைகள் இம் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளதாக மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகத்திற்கான தெரிவு கடந்த மாதம் இறுதியில் வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இடம்பெற்றது.

அந்தவகையில் சங்கத்தின் நடப்பாண்டிற்கான தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பொருளாளர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர் வாக்கெடுப்பின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பேருந்துகள் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான பொதுச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. குறித்த சேவையில் இடம்பெறும் குறைபாடுகள் மற்றும் மேம்பாடுகளை அவதானிக்கும் பொருட்டு வழித்தடங்களுக்கான பகுதித்தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகத்தில் தலைவராக கே.முருகேசு, உப தலைவராக ஆர்.எஸ்.கொடியன், செயலாளராக டி. சுரேஸ்குமார், உப செயலாளராக அ.அருள்நேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை பொருளாளராக ஐ.எம். இயாஸ, கணக்காய்வாளராக கே.கேசரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே' வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்து மார்க்கங்களான மன்னார்-கொழும்பு வழித்தடத்திற்கு எஸ்.எச்.சாபீர, மன்னார்-யாழ்ப்பாணம் வழித்தடத்திற்கு டிரவிந்திரகுமார், மன்னார்-வவுனியா வழித்தடத்திற்கு எஸ்.ஏ.டென்சில் குரூஸ், மன்னார்-கற்பிட்டி வழித் தடத்திற்கு ஏ.ஓ.நியாஸ் ஆகியோர் பகுதித்தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே உள்ளூர் சேவைகளான மன்னார்-தலைமன்னார் வழித்தடத்திற்கு எல்.லோறன்ஸ், மன்னார்-பேசாலை வழித்தடத்திற்கு எம்.மகேந்திரன், மன்னார்-தாழ்வுபாடு வழித்தடத்திற்கு எம்.வாகேசன, மன்னார்-வட்டக்கண்டல் வழித் தடத்திற்கு டி.சதானந்தன், மன்னார்-வங்காலை வழித்தடத்திற்கு ஆர்.அலன் றோஸ், மன்னார்-நானாட்டான்-முத்தரிப்புத்துறை வழித்தடத்திற்கு ஆர்.கைலாச மூர்த்தி, மன்னார்-காக்கையன்குளம்-விளாத்திக்குளம் வழித்தடத்திற்கு எஸ்.எம்.ராபிக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையில் பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தொடர்பில் பயணிகள் தமது கருத்துக்களை மேற்குறிப்பிட்ட வழித்தடங்களுக்கு பொறுப்பானவர்களின் கவனத்திற்கு தெரிவிக்க முடியும்.

அதேவேளை மன்னார் தனியார் பேருந்து நிலையத்தில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் நேரடியாகவும் அங்கு வைக்கப்பட்டிருக்கும் கருத்துப் பெட்டியில் கடிதங்கள் மூலமாகவும் பயணிகள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (2-9)

# வாகன விபத்தில் சாரதி காயம் பரந்தன்-முல்லை.வீதியில் சம்பவம்



(மல்லாவி)


கிளிநொச்சி பரந்தன் முல்லை வீதி இராண்டாம் கட்டை கிளி/றோமன் கத்தோலிக்க பாடசாலை முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்தவர் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த எம்.கே.ஜ. பரந்தா (வயது-26) என்பவராவார்.

வாகனசாரதி நித்திரையில் வாகனம் செலுத்தியமையால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. விபத்தில் காயமடைந்த வாகன சாரதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)




# உயர்தரத்தில் புவியியல் பாடம் கற்கின்ற மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள்



(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 26 பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப்பிரிவில் புவியியல் பாடத்தை கற்கும் மாணவர்களுக்கு கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினரால் அப்பியாசக் கொப்பி வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த அப்பியாசக் கொப்பிகள் வெளிநாட்டில் இருந்து கிடைக்கப் பெற்றவையாகும்.

கரைச்சி, கண்டாவ்ளை, பூநகரி, பளை ஆகிய பிரதேசங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

தற்போது 12 பாடசாலைகளுக்கு இந்த அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டுள்ள்து. எதிர்வரும் 5 நாட்களுக்குள் ஏனைய பாடசாலைகளுக்கும் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (2-298)

# இராணுவ சிப்பாய் தற்கொலை

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பகுதியில்அமைந்துள்ள இராணுவ முகாமில் தனக்கு தானே துப்பாக்கிபிரயோகம் மேற்கொண்டு இராணுவ சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இச்சம்பவம் நேற்று காலை 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

64 ஆவது படைப் பிரிவை சேர்ந்த (64 டிவிசன் ஏஓஆர்) பிரிஇ விமலரட்னே என்பவரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளவராவார். மரணம் தொடர்பிலான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# இ.போ.சபை பேருந்து சாரதி மீதான தாக்குதல் தொடர்பில் இருவர் கைது

வவுனியாவில் தனியார் பேருந்து மற்றும் இலங்கை போக்கு வரத்துச் சபை சாரதிகளுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கொக்குவெளி, ஏ-9 வீதியில் கடந்த 31ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற மேற்படி சம்பவம் குறித்து பொலிஸார் குறிப்பிடுகையில், 'பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த இ.போசபை பேருந்தும், முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்தும் பயணிகளை ஏற்றும் முகமாக புளியங்குளம் பகுதியில் இருந்து போட்டிக்கு ஓடியுள்ளன.

இதன்போது இ.போ.சபை பேருந்து வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீர் என பிறேக் அடித்துள்ளது. பின்னால் பயணித்த தனியார் பேருந்து அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து தனியார் பேருந்து சாரதி, நடத்துநர் பேருந்தில் இருந்து இறங்கி இ.போ.சபை சாரதி மீது தாக்கியுள்ளனர். இதனால் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. காயமடைந்த இ.போ.சபை சாரதி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைகலப்பில் ஈடுபட்ட தனியார் பேருந்து சாரதி, நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன' என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (2-250)


# தாய்ச்சங்கத்தில் ஓய்வூதிய அங்கத்தவர்களாக இணைந்தவர்களுக்கு அட்டைப்படிவம் நிரப்பல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் ஓய்வூதியர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 10மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பழைய கச்சேரியில் நடைபெற்றது. இதன் போது இப்பிரிவிலுள்ள ஓய்வூதியர்களின் நன்மை கருதிசில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது தாய்ச்சங்கத்தின் மூலம் அனைத்து ஓய்வூதியர்களும் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கான அங்கத்துவ அட்டைப்படிவங்கள முழுமையாகப் பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் பின்னுருத்தாளர் போன்ற விபரங்களும் ஏனைய தரவுகளும் பெற்றுக்கொள்ள வேணடியுள்ளது.

எனவே ஓய்வூதியர்களின்நன்மை கருதி ஒவ்வொரு மாதத்திலும் வரும ஓய்வூதியத்தினத்திலும் மாதாந்தம் 25 ஆம் திகதியும் ஓய்வூதியர்கள் அனைவரும் சங்கச்செயலாளரை கிளிநொச்சி பழைய கச்சேரியிலுள்ள அலுவலகத்தில் சந்தித்து தமக்கான தேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். 25 ஆம் திகதி சனி, ஞாயிறு அல்லது விடுமுறை நாளாக வரும் பட்சத்தில் அடுத்து வரும் வேலை நாளில் சந்திப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளதாக தலைவர் அ.கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

எனவே அனைத்து ஓய்வூதியர்களும் இதனைக் கவனத்திலெடுத்து தமக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தேவைப்ப டுவோர் 077 794 7797 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)



# விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் நாளை மறுதினம் வவுனியா விஜயம்

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் அழைப்பை ஏற்று விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது, வவுனியா பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்டத்தில் விளையாட்டு வீரர்கள், விளையாட்டுக் கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்நிலையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களை பிதிநிதித்துவப்படுத்துவோர் மற்றும் விளையாட்டு வீரர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்திற்கு வருகை தந்து தமது பிரச்சினைகள் தொடர்பாக தெரியப்படுத்தி வவுனியாவின் விளையாட்டுத் துறையை விருத்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்துள்ளார். (2-250)

# கிளிநொச்சி சேவைச் சந்தைக்கு 1கோடியே50லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையினால், நெல்சிப் திட்டத்தின் ஊடாக கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரிவிற்குட்பட்ட கிளிநொச்சிப் பிரதேச சபையின், கிளிநொச்சி சேவைச் சந்தை அமைத்தலுக்கான ஒரு கோடியே 50 இலட்சத்து 94ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வேலைகள் அனைத்தும் எதிர்வரும் மார்ச் மாதம் அளவில ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் சேவைகள் யாவும பூர்த்தி செய்யப்பட்டு,பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி

(சோலைநகர்)

கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உருத்திரபுரம் மகாவித்தியால விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி. மீனலோஜினி இதய சிவதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பழைய மாணவனும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக பழையமாணவனும் கிளிநொச்சி விவசாயப் போதனாசிரியருமான அ.ஜெயராசா, கௌரவ விருந்தினராக உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் ப.சபாரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-309)

# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி நிர்மலகுமாரன் ஜெயமணி

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நிர்மலகுமாரன் ஜெயமணி (30.01.2016) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெலிச்சோல் மிக்கேல்- எஸ்வேனிக்கம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியதாஸ்-அருளம்மாவின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற நிர்மலகுமாரனின் பாசமிகு மனைவியும்,

சுஜிதா (லண்டன்), நீரோ (லண்டன்), றோய் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்ஷகுமார் (லண்டன்), அல்வின் ஸ்ரலின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


ஷெரோனா, நிரோஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருச்செல்வம், வேதநாயகம், பிரான்சிஸ், அருள்தாஸ் ஆகியோரின் அன்பு சகோதரியும் யுவராஜ், லீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் திலகவதி, அருள்ராஜாவின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை வியாழக்கிழமை (04.02.2016) அன்று பிற்பகல் 1.30 மணியளவில் அச்சுவேலி அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக வல்லை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மண்ணில்**
20
05
1950

**விண்ணில்**
30
01
2016





பத்தமேனி,
அச்சுவேலி.

(3470)

தகவல்:
பிரான்சிஸ் (அண்ணா),
பிள்ளைகள்

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## விஷ்ணுகிராந்தி



Botanical Name:Evolvulus alsinoides

Family: Convolvulaceae

இதன் பூக்கள் கார்மேக வண்ணனுடைய நிறத்தைப் பெற்றிருப்பதால் விஷ்ணுகிராந்தி என்ற பெயர் வந்திருக்கலாம்.

இது 15,20 செ.மீ.தூரம் வரைக்கும் தரையோடு ஒட்டிப் படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. சுமார் 10 மி.மீ நீளமும் 7 மி.மீ அகலமுள்ள நீண்ட விருத்த வடிவமான சிறிய இலைகள் கொடிகளில் வரிசையாக மாறி மாறி அமைந்துள்ளன.

இலை, கொடி ஆகியவற்றில் மெல்லிய பஞ்சு போன்ற சுனைகளுண்டு. சிறிய வட்ட வடிவப் பூக்கள். நீல மேக நிறமுடையதாகவும் மிக மெல்லியதாகவும் இருக்கும். இரண்டு கடுகளவுள்ள காயினுள் சுமார் 4-5 விதைகள் உண்டு.

**இனவிருத்தியும் பரம்பலும்**

யாழ்.மாவட்டத்தில் சிறிது மணல் பாங்கான இடத்தில் அதிகமாக காணமுடியும். செம்மண், மணல் கலப்புள்ள எல்லா இடங்களிலும் விதைகளைத் தூவிப் பயிரிடலாம். இதில் 2 வகையுண்டு. வெள்ளை நிறப்பூக்களைக் கொண்ட விஷ்ணு கிராந்தி மிகவும் அரிதாகவே பரம்பிக் காணப்படும்.

**மருத்துவப் பிரயோகம்**

விஷ்ணுகிராந்தியுடன் சீரகத்தைச் சேர்த்து அரைத்து பாலில் கலந்து குடித்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

விஷ்ணுகிராந்திப் பொடியை தினமும் இரண்டு கிராம் வெந்நீரில் கலந்து குடித்தால் குழந்தைப்பேறு உண்டாகும்.

விஷ்ணுகிராந்தியுடன் சம அளவு துளசி சேர்த்து கசாயம் வைத்துக் குடித்தால் அஜீரணம், கழிச்சலோடு கூடிய காய்ச்சல் குணமாகும்.

விஷ்ணுகிராந்தியை தினமும் இரண்டு கிராம் சாப்பிட்டு வந்தால் வெட்டைச்சூடு தணியும்.

விஷ்ணுகிராந்தியுடன் சுக்கு , மிளகு, திப்பிலி ஆகியவற்றைச் சம அளவு சேர்த்துப் பொடி செய்து தினமும் இரண்டு கிராமளவு சாப்பிட்டு வந்தால் சளி, இருமல் போன்றவை குணமாகும்.

விடாத காய்ச்சலுக்கு விஷ்ணு கிராந்தி என்பது பழமொழி. பொதுவாக எமது மருத்துவத்தில் வைரஸ் தொற்றுக்களால் வரும் காய்ச்சலுக்கு பயன்படும் முக்கிய மூலிகைச் சரக்குகளுள் விஷ்ணுகிராந்தி முக்கியமானது. இதன் முழுக்கொடியுடன் கருந்துளசி, நிலவேம்பு சேர்த்து குடிநீர் தயாரித்து 30-60 மி.லீ. அளவு காலை மாலை எடுக்க சிறுநீர் நன்கு வெளிப்பட்டு வியர்வை பெருகி சுரத்தைத் தடுக்கும். அத்துடன் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்கும்.

சில கிராமத்து மக்கள் இன்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் காய்ச்சலுக்கு கை மருந்தாக இதனை குடிநீரிட்டு கொடுப்பது வழக்கம்.

அரைக் கைப்பிடியளவு விஷ்ணு கிராந்தியுடன் மூன்று வெள்ளைப் பூண்டு பற்கள், அரைத்தேக்கரண்டி அளவு சீரகம் சேர்த்து மை போல அரைத்து தினமும் ஒரு வேளை 20 நாட்கள் கொடுத்துவர உடலில் வீரிய விருத்தியுண்டாகும்.

சுத்தம் செய்த விஷ்ணுகிராந்தி இலைகள் ஒருகைப்பிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வதக்கி ஒரு டம்ளர் அளவு தண்ணீர் விட்டு பாதியளவுக்கு சுண்டக் காய்ச்சிய குடிநீரை காலை மாலை கொடுத்துவர வயிற்றுப் போக்கு நீங்கும்.

50 கிராம் இலைகளை தானிய மாவுடன் சேர்த்து அடை தயாரித்து புசித்துவர உடல் வீரிய விருத்தியுண்டாகும்.

20 கிராம் விஷ்ணுகிராந்தியை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு 500 மில்லி நீர்விட்டு கால் பங்காக சுண்டக் காய்ச்சி வடிகட்டி 30-60 மில்லி தினமும் இருவேளை பெரியவர்களுக்கு கொடுக்க இருமல், கசம் தீரும்.

இதைப் பாலில் கலக்கிக் கொடுக்க கண்களுக்குப் பிரகாசம் கொடுக்கும்.

இருமல், சளி போன்ற நிலையில் குடிநீரிடும் சமயம் விஷ்ணு கிராந்தி, சிற்றரத்தை, துளசி கூட்டிக் கொடுப்பது சிறந்தது.

50 கிராம் செடியை ஒன்றிரண்டாக மட்பாத்திரத்திலிட்டு 500 மி.லீ. தண்ணீர் விட்டு 200 மில்லியாகக் காய்ச்சி வடிகட்டி சுக்கு சின்னதாக தட்டி போட்டு காய்ச்சி, பால் 200 மில்லி ஊற்றி வெல்லம் 150 கிராம் போட்டு வடிகட்டி பெரியவர்களுக்கு 75 மில்லியா கக் கொடுக்க வேண்டும்.

இதனால் சுரம், இருமல், அஜீரணம், தலைவலி, மயக்கம், தூக்கமின்மை குணமாகும்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# நகங்கள் காட்டும் நோய்க்குறிகள்!



அகத்தின் அழகு நகத்தில் தெரியும்' எனும் மருத்துவ மொழி அறிவீர்களா? ஆம், நகங்கள் நம் உள் உறுப்புகளின் ஆரோக்கியம் காட்டும் கண்ணாடி.

விரல் நுனி வரை பரவி உள்ள நரம்பு மற்றும் இரத்தக் குழாய்களைப் பாதுகாக்கும் இயற்கை அரண்தான் நகங்கள். நகத்தில் நான்கு முக்கியமான பாகங்கள்- உள்ளன. வெளிப்புறம் தெரியக் கூடியது நெயில் பிளேட், அதற்கு அடியில் இருக்கும் சதை நெயில் பெட், விரலுக்கு உள்ளே இருப்பது நெயில் மேட்ரிக்ஸ், இதுவே நக செல்களை உருவாக்கி, நகத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கிறது. நம் தோலுக்கும் நகத்துக்கும் இடையே வெள்ளையாக, பிறை நிலா போன்று இருப்பது லூனுலா (Lunula). இவை ஒவ்வொன் றுமே நமக்கு வரக்கூடிய நோய்க் குறிகளைக் காட்டக்கூடியவை. நகத்தில் படுக்கையான, அழுத்தினாலும் மறையாத வெள்ளைக் கோடுகள் இருந்தால், அது ஆர்சனிக் நச்சு உடலில் இருப்பதற்கான அறிகுறி.

புரதச்சத்து குறைபாட்டாலும் நகத்தில் வெள்ளைக் கோடுகள் உருவாகும். ஆனால், இது அழுத்தினால மறைந்துவிடும்.

நகத்தில் சிவப்பு அல்லது கறுப்பு நிறத்தில் செங்குத்தான கோடுகள் இருந்தால் இதயத்தில் உள்ள தொற்றைக் குறிக்கும்.

தோலை ஒட்டி வேகத்தடை போன்ற அமைப்பு நகத்தில்ஏற்பட்டால், உடலில் ஏதோ ஓர் உறுப்பு பாதித்துள்ளது என அர்த்தம். அந்த நோய் சரியாகும்போது, அந்த வேகத்தடை போன்ற நக அமைப்பு, நுனிப்பகுதியை அடைந்து மறைந்துவிடும்.

தொடர்ச்சியாக மெனிக்யூர், பெடிக்யூர் செய்பவர்களுக்கும், தொடர்ந்து தண்ணீரில் வேலை பார்ப்பவர்களுக்கும் நகம் இரண்டு அடுக்




காக இருக்கும். சொரியாசிஸ் இருப்பவர்களுக்கு நகமானது நகப்படுக்கையில் இருந்து விலகி இருக்கும்.

இரும்புச்சத்துக் குறைபாடு உடையவர்களுக்கு, நகமானது கரண்டி போன்ற அமைப்பிலும், சிறுநீரகத்தில் பிரச்சினை இருப்பவர்களுக்கு நகம் ஆரம்பிக்கும் இடத்தில் ஆரோக்கியமாகவும், பாதிக்கு மேல் காவி நிறத்திலும் மாறி இருக்கும்.

நுரையீரலில் தொந்தரவு இருப்பவர்களுக்கும், அதிகம் புகைபிடிப்பவர்களுக்கும் நகம் வீங்கியும், புடைத்தும் காணப்படும். இவை, நுரையீரல் கெட்டுப்போய், நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் அறிகுறி.

கல்லீரலில் குறைபாடு இருந்தால் நகம் ஆரம்பிக்கும் முதல் பாதி வெளுத்தும், மீதி வழக்கமான நிலையிலும், லூனுலா நீல நிறத் திலும் காணப்படும். இது கல்லீரலல் காப்பர அதிகம் இருப்பதற்கான குறியீடு.

மேலும், சிலருக்கு மஞ்சள் நிற நகம் இருந்தால், அது பூஞ்சையினால் ஏற்படும் பாதிப்பு. ஆறு மாதங்கள் சிகிச்சை எடுத்தால் சரியாகிவிடும். ஆனால், பிறவியிலிருந்தே இருந்தால் அவர்களுக்கும் நுரையீரல் தொந்தரவு இருக்கும்.

எல்லோருக்கும் சகஜமாக வரக் கூடியது நகச்சுத்தி. இது கிருமியினால் ஏற்படும். உடனடியாக ஆன்டிபயாடிக் எடுத்துக்கொள்ள வேண்டும். எலுமிச்சை வைப்பதெல்லாம் சரியான சிகிச்சை கிடையாது. இதனால், சிலருக்கு நகசுத்தி இருந்த இடத்தில் குழி ஏற்படும். ஆதலால், நகங்களை நன்கு பராமரிப்பது அவசியம். இரண்டு வாரங் களுக்கு ஒருமுறை நகங்களை வெட்டி, சுத்தமாக வைத்துக்கொள் வது அவசியம். நகங்களை வெட்டும போது, சதையோடு ஒட்டி இருக்கும் தோலுடன் சேர்த்து வெட்டக் கூடாது. அவ்வாறு வெட்டினால், மீண்டும் நகம் வளரும்போது வலியை உண்டாக்கும்.

சாப்பிட்ட பின், விளையாடிய பின், வேதிப்பொருட்கள், ரசாயனம் போன்றவற்றோடு தொடர்புடைய வேலை செய்தபின், உடனடியாகக் கைகளை ஹேண்ட் வாஷ் போட்டுக் கழுவுவது சிறந்தது.

நகங்களின் இடுக்குகளில் இருக்கும் அழுக்குகளைச் சுத்தம் செய்ய வேண்டும். ஏனெனில், அங்கு நுண்ணுயிரிகள் இருக்கும். நகங்களுக்கு எண்ணெய் பூசியும் பராமரிக்கலாம்.

# தீவிரவாதிகள் மூர்க்கத்தனம்

## 86 பேர் கொன்று குவிப்பு

(அபுஜா)

**நள்ளிரவு வேளை கிராமத்துக்குள் நுழைந்த தீவிரவாதிகள் குண்டுகளை வீசியும் தற்கொலைப்படைத்தாக்குதல் நடத்தியும் துப்பாக்கியால் சுட்டும் வெறியாட்டம் ஆடியதில் 86 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் அங்கு தினம் தினம் பல்வேறு தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றி அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள மயிடுகுரி நகருக்கு அருகே உள்ள டலோரி என்ற கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்தனர். முதலில் அங்கிருந்த வீடுகள் மீது வெடிகுண்டுகளை வீசினர். இதில் ஏராளமான வீடுகள் தீப்பிடித்து எரிந்தன. மக்கள் உயிர் பிழைப்பதற்காக அலறி அடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்தனர். ஆனால் தீவிரவாதிகள் சிறிதும் ஈவு இரக்கமின்றி அவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

இருந்த போதிலும் சிலர் அங்கிருந்து தப்பி அயல் கிராமமான கமோரிக்கு ஓட்டம் பிடித்தனர். ஆனாலும் தீவிரவாதிகளின் வெறி அடங்கவில்லை. ஓடிக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்துக்குள் புகுந்த 3 பெண் தீவிரவாதிகள் தங்கள் உடலில் கட்டிக்கொண்டு வந்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

சுமார் 4 மணி நேரம் நீடித்த தீவிரவாதிகளின் வெறியாட்டத்துக்கு 65 பேர் பலியானார்கள். 60இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த நிலையில் தாக்குதல் நடந்த பகுதியில் இருந்து பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனால் பலி எண்ணிக்கை 86 ஆக உயர்ந்தது.

படுகாயம் அடைந்தவர்களுக்கு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (இ)

## கடலில் மூழ்கி 13மாணவர்கள் உயிரிழப்பு

(மும்பை)

சுற்றுலா சென்ற இடத்தில் கடலில் குளிக்கச் சென்ற 3 மாணவிகள் உட்பட 13 மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. புனே கல்லூரியைச்சேர்ந்த 130 மாணவர்கள் 3 பேருந்துகளில் மகாராஷ்டிராவுக்கு சுற்றுலா சென்றனர். ராய் காட் மாவட்டத்தில் உள்ள முருட்-ஜன்ஜிரா கடலில் சுமார் 18 மாணவர்கள் குளிப்பதற்காக சென்றனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக வந்த இராட்சத அலை மாணவர்களை கடலுக்குள் இழுத்து சென்றது. இதனைப்பார்த்து அருகே இருந்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக மாணவர்களை மீட்க முயன்றனர். நீரில் தத்தளித்த 5 மாணவர்கள்ள மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. 3 மாணவிகள் உட்பட 13 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். (இ)

## ஆங்சான் சூகி தலைமையில்

# மியன்மாரில் புதிய ஆட்சி தொடங்கியது



மியன்மாரில் ஆங்சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் (என்.எல்.டி) பெரும்பான்மை பெற்ற புதிய நாடாளுமன்ற கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதன் மூலம் இராணுவம் மட்டுமே ஆட்சி செய்யும் நடைமுறை முடிவுக்கு வந்துள்ளது.

மியன்மாரில் கடந்த 1962 இல் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. சுமார் 50 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சிக்குப் பிறகு 2011 இல் ஜனநாயகத்தை நோக்கி மியன்மார் திரும்பத் தொடங்கியது. இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆங்சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் 80 சதவீத இடங்களை கைப்பற்றியது. இதன் மூலம் அரசு அமைக்கும் தகுதியை அக்கட்சி பெற்றது.

இந்நிலையில் அக்கட்சி பெரும்பான்மை பெற்ற நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் முதல் அதிகார பூர்வமாக செயறபடத் தொடங்கியது.


மியன்மாரின் தற்போதைய ஜனாதிபதி தெய்ன் செய்ன் எதிர்வரும் மார்ச் இறுதியில் பதவி விலகுவார் என்று தெரிகிறது. அதன் பிறகே தேசிய ஜனநாயக லீக் ஆட்சிப் பொறுப்பேற்கும்.

என்றாலும் நாடாளுமன்றத்தில் 25 சதவீத இடங்கள் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாலும், பாதுகாப்பு, உள்துறை, எல்லை விவகாரங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகள் இராணுவத்தின் வசமே இருக்கும் என்பதாலும் ஆட்சியில் இராணுவத்தின் கட்டுப்பாடுகள் தொடரும்.

புதிய நாடாளுமன்றத்தின் தொடக்கப் பணிகளில் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்யும் பணியும் ஒன்றாகும். இந்நிலையில் சூகியின் மகன்கள் பிரிட்டன் குடியுரிமை பெற்றவர்கள் என்பதால் அரசியல் சாசனப்படி சூகி ஜனாதிபதியாக பதவியேற்க இயலாது. என்றாலும் அவர் திரை மறைவில் இருந்து ஆட்சி நடத்துவார் என்று தெரிகிறது.

ஆடசி மாற்றம் சுமுகமாக நடைபெறுவதற்காக இராணுவ உயரதிகாரிகளை சூகி சந்தித்து பேசியுள்ளார். இதில் தாங்கள் தலையிடப் போவதில்லை என இராணுவ அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர். (இ)

## நீருக்கு கீழ் பிரமாண்ட உணவகம்



இந்தியாவிலேயே முதன்முறையாக அகமதாபாத் நகரில் நீருக்கு அடியில் பிரமாண்ட உணவகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏராளமான உணவகங்கள் நீருக்குள் இருப்பது போன்ற தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாட்டிலேயே முதன் முறையாக குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நீருக்கு அடியில் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

பாரத் பட் என்ற தொழிலதிபருக்கு சொந்தமான The Real Poseidon என்ற சைவ உணவகம் தான் அது.

பூமிக்கடியில் 20 அடி ஆழத்தில் 1.50 இலட்சம் லீற்றர் தண்ணீரால் நிரம்பிய மீன் கண்காட்சியகத்திற்கு உள்ளே இந்த உணவகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மீன் காட்சியகத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன் வகைகள் உள்ளன.

32 இருக்கைகளைக் கொண்ட இந்த ரெஸ்டோரண்ட்டில் தாய்லாந்து, சைனீஸ், மெக்சிகன் மற்றும் இந்திய உணவுகள் பரிமாறப்படுகின்றன.

எனினும் சைவ உணவுகள் மட்டுமே இங்கு பரிமாறப்படுகிறது என பது குறிப்பிடத்தக்கது. (இ)

## எகிப்தில் கடும் பனி மூட்டம்; விபத்தில் சிக்கி 22பேர் பலி




எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கடந்த சில நாட்களாக மோசமான வானிலை நிலவி வருகிறது. வீதிகளில் எதிரே வரும் வாகனங்களை தெரியாத வகையில் கடும் பனி மூட்டம் காணப்படுகிறது.

நேற்று முன்தினம் கெய்ரோவுக்கு அருகே உள்ள பெனிசூயிப் நெடுஞ்சாலையில் அதிகாலையில் பல கார்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. 12 வாகனங்கள் சிக்கிய இந்த விபத்தில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 21 பேர் படுகாயம் அடைந்தனர். அதிக பனி மூட்டமே விபத்துகக் காரணம் என பொலிஸார் கூறினர.

அதேபோல் தெற்கு கெய்ரோ பகுதியில் மீன்பிடி தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பகுதியில் பனி மூட்டம் அதிகமாக இருந்ததால் ரயில்வே கேட் அடைக்கப்பட்டிருந்தது சாரதியின் பார்வையில் படவில்லை. லொறி ரயில்வே கடவையை உடைத்துக் கொண்டு சென்றபோது தண்டவாளத்தில் சிக்கி கொண்டது. அப்போது அங்கு வந்த ரயில் லொறி மீது பயங்கரமாக மோதியது. இதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 3 பேர் படுகாயம் அடைந்தனர். (இ)

# சேதனப் பசளை பாவனையை ஊக்குவிக்க புதிய இயந்திரம்





விவசாயத்துறையில்கடந்த கால சேதனப் பசளையை மீண்டும் ஊக்குவிப்பதற்கு புதிய இயந்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் கீ.சிறிபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டமானது கடந்த 20, 30 வருடங்களுக்கு முன்னர் சேதனப் பொருட்கள் பாவிப்பதில் இலங்கையிலேயே முன்னிலையில் இருந்த மாவட்டமாகும்.

அதனைத்தொடர்ந்து வந்த காலப்பகுதியில் காலநிலை மாற்றம், தொழில் முயற்சி மாற்றம், சமூக மாற்றம் என பலதரப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக இளம் சமுதாயத்தினர் விவசாய செய்கையில் இருந்து விலகி காணப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஏறத்தாழ 66 ஆயிரம் விவசாய குடும்பங்கள் இருந்த போதிலும் விவசாய கூலி தொகுதியினர் தமது செயற்பாடுகளை வேறு துறைகளுக்கு மாற்றியதன் காரணமாக விவசாயத் துறையில்கூலித் தொழிலாளர்களுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள்அதிகமாகசெயற்கைமுறை விவசாயத்திற்குசென்று கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. இந்த நிலை அதிகரித்த வண்ணமே காணப்படுகிறது.

கடந்த காலங்களில் ஏறத்தாழ 90 வீதமான விவசாயிகள் இயற்கை பசளைகளை பாவித்த பின்னர் பயிர்ச்செய்கைகளை ஆரம்பித்து வந்தனர். ஆனால் கடந்த 10 வருடங்களக இந்த முறை அழிவடைந்து 2 வீதமானவர்களே சேதன முறையில் ஈடுபடுகின்றனர். ஏனையவர்கள் செயற்கை பசளைகளை பாவிக்கின்றனர்.

சேதனப் பசளைகளை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு அதை இயந்திரமயப்படுத்தல் மிகவும் இன்றியமையாததாகும். எனவே விவசாயத் திணைக்களத்தால் 2007 ஆம் ஆண்டில் இருந்து இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு அதற்குரிய இயந்திரம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு உருவாகியது. அதன் அடிப்படையில் 7 வருடங்களின் பின்னர் குறித்த நடவடிக்கைக்குரிய தீர்வு கிடைத்துள்ளது.

இலங்கையிலேயே முதன் முறையாக இந்த இயந்திரத்தை யாழ்.மாவட்டத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த இயந்திரம் விவசாயத்துறைக்கு பெரிய வரப்பிரசாதமாகவும் விவசாயத்துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தக்கயதாக இருக்கும்.

இந்த இயந்திரத்தின் மூலம் மண்ணுடன் கலப்பதற்கு ஏற்ற வகையில் மிகக் குறுகிய நேரத்தில் இயற்கைப் பசளைகளை தூளாக்கி மண்ணுடன் இலகுவில் கலந்து விடமுடியும்.

இது ஒரு மணித்தியாலத்தில் சுமார் 5 தொன் அளவான சேதனப் பசளைகளை தூளாக்கக்கூடியதாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு தூவ வேண்டிய சேதனப் பசளைகளை இரண்டு மணித்தியாலங்களில் இலகுவில் மிகக் குறைந்த செலவுடன் கலந்து விட இந்த இயந்திரம் உதவுகிறது. இதன்மூலம் எமது மண்ணின் வளத்தையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.


மேலும் யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வர்த்தக ரீதியான வாழைச்செய்கையினை மேற்கொண்டுவருகின்றனர். ஆனால் ஏனைய பயிர்ச்செய்கை சூழலுடன் ஒப்பிடும்போது வாழைத் தோட்டம் தான் குறுகிய காலத்தில் கூடிய அளவு பயிர்க்கழிவு சேரும் இடமாக இருக்கிறது. அதேவேளை ஏனையவற்றுடன் ஒப்பிடும்பொழுது வாழைக்கழிவுகள் தான் உக்குவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கின்றன.

ஆகவே இந்த வாழைக் கழிவுகளை வெட்டித் தூளாக்கினால் மட்டுமே விரைவாக உக்கலடையும். இதைத்தூளாக்குவதற்கு கூடியளவு கூலி தேவைப்படுகிறது. ஆனால் இந்த இயந்திரத்தின்மூலம் மிக இலகுவாக வெட்டி தூளாக்கமுடிவதோடு சுற்றுச் சூழலையும் சுத்தமாக பேணமுடியும். இதன்மூலம் பயிர்க்கழிவுகள் இலகுவாக மீள சுழற்சிக்கு உட்படுத்தப்படும்.

மேலும் பிரதேச சபைகளில் கழிவகற்றும் பிரதேசங்களில் உள்ள பொருட்களை அதாவது வாழைக்கழிவு வேறு பயிர்க்கழிவு, முருங்கைத் தடிகளை இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி தூளாக்குவதன் மூலம் இட நெருக்கடியை இல்லாது செய்வதுடன் சூழலைச் சுத்தமாக்கவும் முடியும்.

எனவே குறித்த இயந்திரத்தைப்பயன்படுத்திகழிவுகளை தூளாக்கி சேதனப் பசளைகளை மக்களுக்கு விநியோகிப்பது சிறந்த வழிமுறை ஆகும்.

இந்த இயந்திரத்தை தற்போது யாழ்.மாவட்ட விவசாய திணைக்களத்தில் பார்வையிடுவதோடு இது தொடர்பாக விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும். தற்போது குறைந்த செலவில் விவசாயத் திணைக்களத்தால் வாடகைக்குவிவசாயிகளுக்குகொடுக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



வடக்கு மாகாண முதலமைச்சருடன் யாழ். இந்திய பிரதித்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தனது பணிக்காலம் நிறைவடைந்ததையிட்டு மரியாதையின் நிமிர்த்தம் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ். இந்திய பிரதித் தூதுவராக கடமையேற்று பல்வேறு பணிகளை ஆற்றி வந்த பிரதித்தூதுவரின் பணிக்காலம் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது. இதேவேளை புதிய பிரதித் தூதுவராக ஜெ.மாதோ நியமிக்கப்பட்டுள்ளார். (படம்: பொ.சோபிகா)

# கல்வீச்சுத் தாக்குதலில் வயோதிபருக்கு காயம்

இருவீட்டார் இடையே இடம் பெற்ற வாக்கு வாதம் கல்வீச்சுத் தாக்குதலில் முடிவடைந்தால் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் இடம்பெற்றது. இதில் அதேயிடத்தைச் சேர் ந்த இளையதம்பி–தங்கராசா (வயது–70) என்ற வயோதி பரே இவ்வாறு படுகாயமடை ந்துள்ளார்.

தலையில் படுகாயமடைந்த வயோதிபர் யாழ்.போதனாவைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-30)

# சீனாவில் இணையம் மூலம் நிதிமோசடி; 21 பேர் கைது

சீனாவில் இணையம் மூலமாக செயற்படும் நிதிநிறுவனங்கள் பல்வேறு மோசடிகளில் ஈடுபடுவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன. இதையடுத்து சீன பொலிஸார் தனிப்படை அமைத்து இதுகுறித்து விசாரணை மேற்கொண்டனர். இதில் இசூபாவ் என்ற நிதிநிறுவனம் இணையம் வழியாக சுமார் 9 லட்சம் முதலீட்டாளர்களிடம் பல்வேறு திட்டங்களுக்கென முதலீட்டினை பெற்று மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. அந்த நிறுவனம் வெளியிட்ட திட்டங்களில் 95 சதவீதம் போலியானவை எனவும் தெரிகிறது. இதுபோன்ற மோசடிகள் மூலம் அந்த நிறுவனம் இதுவரை 760 கோடி டொலர் (சுமார் ரூ.45 ஆயிரத்து 600 கோடி) வரை கையாடல் செய்து உள்ளது.

இதையடுத்து இந்த மோசடி தொடர்பாக அந்த நிறுவனத்தின் தலைவர் உட்பட 21 பேரை பொலிஸார் நேற்று கைது செய்தனர். இந்த நிறுவனத்துக்கான இணைய முகவரி முடக்கப்பட்டது. மேலும் அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய மற்ற நிறுவனங்களுக்கு சீல் வைத்ததோடு அவற்றின் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன. (இ)

# பயிற்சி நெறிகளும் கருத்தரங்குகளும்

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் மாசி 2016 இல் MS Office, Computer Graphic Design, Computer Hardware Technology (கணனி வன்பொருள் தொழில்நுட்பம்) ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் Proper Usage of internet (சரியான முறையிலான இணையப் பாவனை) e-waste and its effects on environment and human (இலத்திரனியல் கழிவுகளும் அவற்றினால்சூழலிலும் மனிதனிலும் ஏற் படுத்தப்படும் தாக்கங்கள்) என்பன தொடர்பான விழிப்பு ணர்ச்சிக் கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளி லும் விழிப்புணர்ச்சிக்கருத்தரங்குகளிலும் பங்குபெற விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டிபிரதேசசெயலகவிதாதா வள நிலையத்தில்பதிவு செய்து கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீஅறிவித்துள்ளார்.(இ-5)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சங்க காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சங்க அங்கத்தவர்கள் மேற்படி கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சி.சிறி பிரகாஷ் அறிவித்துள்ளார். (இ-5)

# ஆப்கான் பாராளுமன்றம் அருகே தற்கொலைப்படைத் தாக்குதல்

## பலி எண்ணிக்கை 20 ஆக உயர்வு

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் பாராளுமன்றம்அருகேயுள்ள பொலிஸ் முகாம் மீது தலிபான் தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவதற்காக தலிபான் தீவிரவாத அமைப்புடன் அமைதி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவது தொடர்பாக, எதிர்வரும் 6ஆம் திகதி சர்வதேச பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. இஸ்லாமாபாத்தில்நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிலையில், பேச்சுவார்த்தைக்கான முயற்சியை சீர்குலைக்கும் வகையில் மத்திய காபூலில் உள்ள டேமஸாங் பகுதியில் பாராளுமன்றத்தின் அருகே உள்ள பொலிஸ் முகாமில் நேற்று முன்தினம் இந்த தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முகாமிற்குள் செல்வதற்காக பொலிஸ் அதிகாரிகள் வரிசையில் நின்றிருந்த போது அங்கே ஊடுருவிய தற்கொலைப் படை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளான். இதில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும், 20 பேர் காய மடைந்ததாகவும் முன்னர் செய்தி வெளியாகியது.

சிலமணி நேரத்துக்கு பின்னர் பலியானோர் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளதாகவும், 29 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ)

# இந்திய பிரதமர் மோடியின் சொத்து மதிப்பு தெரியுமா?

(சென்னை)

பிரதமர் மோடியின் சொத்து மதிப்பு பற்றிய தகவல் பிரதமர் அலுவலக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் அசையாச் சொத்தின் மதிப்பு கடந்த 13 ஆண்டுகளில் சுமார் 25 மடங்கு அதிகரித்ததையடுத்து மோடியின் சொத்து 1.41 கோடி ரூபா என்று பிரதமர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஓகஸ்ட் 18, 2014 இல் அறிவிக்கப்பட்ட ரொக்கக் கையிருப்புத் தொகையான 38,700 ரூபா என்பது 4,700 ரூபா ஆகக் குறைந்துள்ளது.

மோடியின் அசையும், அசையா சொத்துக்களின் மதிப்பு 1,26,12,288 ரூபா என்பதிலிருந்து 1,41,14,893 ரூபா ஆக மார்ச் 2015இல் இருந்தது.

மோடியிடம் மோட்டார் வாகனங்கள், விமானம், படகு, கப்பல் என்று எதுவும் இல்லை.


அவர் தனது வங்கிக் கணக்குகளை இன்னும் குஜராத்தில்தான் வைத்துள்ளார். டில்லியில் மோடிக்கு வங்கிக் கணக்கு இல்லை.

கடன்களும் அவர் பெயரில் இல்லாத நிலையில், 4 தங்க மோதிரங்கள் மட்டும் அவரது சொத்துகளில் உள்ளது. இதன் எடை 45 கிராம். இதன் மதிப்பு 1.19 இலட்சம் ரூபா

எல்&டி இன்ஃப்ரா பத்திரங்கள் (வரி சேமிப்பு) 20,000. ரூபா தேசிய சேமிப்பு சான்றிதழ்கள் வகையில் 5.45 இலட்சம். ரூபா ஆயுள் காப்பீட்டு பாலிசிக்கள் மதிப்பு 1.99 இலட்சம் ரூபா ஆகியவை சேர்ந்து பிரதமர் மோடியின் அசையும் சொத்துகளின் மதிப்பு 41.15 இலட்சம் ரூபா என கூறப்பட்டுள்ளது. (இ)

# சி.எஸ்.என். தொலைக்காட்சியை அமைச்சர்கள் கொள்வனவு செய்ய முயற்சி

## கம்மன்பில தெரிவிப்பு



சி.எஸ்.என் தொலைக்காட்சியை இரண்டு அமைச்சர்கள் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யோஷித ராஜபக்ஷ சி.எஸ்.என். தொலைக்காட்சியின் நிறைவேற்று அதிகாரி கிடையாது எனவும், அதனை போர்ம் 48 நிறுவன பதிவு ஆவணத்தில் உறுதி செய்து கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் நிதி மோசடி குற்ற விசாரணை பிரிவினால் கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை வழங்க முடியாது என தெரிவிக்கப்படும் கருத்து உண்மைக்கு புறம்பானது என பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இந்த பிரிவினரால் கைது செய்யப்படுபவர்களுக்கு பொலிஸ் பிணை மாத்திரமே வழங்க முடியாது எனவும், நீதிமன்றத்தில் பிணை வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், சி.எஸ்.என் தொலைக் காட்சியில் ஒருபோதும் யோஷித்த நிறைவேற்று அதிகாரியாகவோ பங்குதாரராகவோ செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-02.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.06 | 146.10 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.18 | 211.46 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.84 | 160.02 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.36 | 144.18 |
| டொலர் | கனடா | 101.09 | 105.22 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.97 | 104.71 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.04 | 103.23 |
| ரூபா | இந்தியா | 2.1218 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.2031 |
| குவைத் | டினார் | 474.0804 |
| ஓமான் | ரியால் | 373.6973 |
| கட்டார் | ரியால் | 39.5463 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3880 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1824 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 110 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 240 | 250 | 400 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 100 | 100 | 80 |
| கரட் | 200 | 200 | 240 | 200 | 250 |
| பூசணி | 40 | 55 | 60 | 80 | 60 |
| புடோல் | 60 | 40 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 75 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 120 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 100 | 80 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 140 | 80 |
| பீற்றூட் | 120 | 80 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 250 | 180 | 240 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 500 | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 100 | 60 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | — | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 40 | 80 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-40 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 90 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 90 | 80 | 120 | 100 |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## திம்புவில் நடைபெற்ற 2 ஆம் கட்டச் சமரசப் பேச்சு தோல்வி! 95

**50 குழந்தைகள் பலி**

இலங்கையில் நடந்த படுகொலை குறித்து சென்னையில் உள்ள "ஈழ தேசிய விடுதலை முன்னணி" தலைவர்களுக்கு வந்த தகவல் வருமாறு,

திருகோணமலை அருகில் உள்ள பாம்பன் தீவு, ஆரங் கட்டி ஆகிய கிராமங்களுக்குள், ஆயுதம் ஏந்திய சிங்களவர்கள் பிற்பகல் 3 மணியளவில் புகுந்தனர்.

வீட்டுக்குள் இருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகளை வெளியே இழுத்து வந்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். ஓர் இடத்தில் 50 குழந்தைகளை வரிசையாக நிற்க வைத்து சுட்டுக் கொன்றார்கள்.

2 ஆவது நாள் கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 250 இற்கும் மேல் இருக்கும் என்று தெரிகிறது.

இலங்கையில் மீண்டும் பெரிய அளவில் கலவரம் மூண்டுள்ளதால், தமிழ் மக்கள் வீடு, வாசலை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடுகிறார்கள்.

இவ்வாறு சென்னைக்குக் கிடைத்த தகவல்கள் கூறின.

**வெளிநடப்பு**

சமரசப் பேச்சு நடத்திக் கொண்டே இலங்கைத் தமிழர்களைப் படுகொலை செய்வதைக் கண்டித்து, திம்பு சமரசப் பேச்சு வார்த்தையைப் புறக்கணித்து அமிர்தலிங்கமும் விடுதலைப்புலிகளும் இதரப் போராளி அமைப்புக்களும் வெளிநடப்பு செய்தன.

"சமரசப் பேச்சு நடக்கும் போதே 400 தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் கொன்று குவித்துள்ளனர். இந்த நிலையில், சமரசப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதில் பயனில்லை என்று கருதுகிறோம்'' என்று அமிர்தலிங்கம் அறிக்கை விடுத்தார்.


**பண்டாரி முயற்சி**

பேச்சுவார்த்தை முறியாமல் தடுக்க பிரதமர் ராஜீவ் காந்தியின் தூதர் (வெளிவிவகார இலாகா செயலாளர்) பண்டாரி தீவிர முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் அது பலனளிக்கவில்லை.

"இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகிறார்கள். தவிர இலங்கை கொடுத்துள்ள சமரசத் திட்டமும் ஏற்கக் கூடியதாக இல்லை. எனவே பேச்சு வார்த்தையில் நாங்கள் கலந்து கொள்வதில் எவ்வித பயனும் இல்லை'' என்று தமிழர் பிரதிநிதிகள் கூறி விட்டார்கள்.

**தோல்வி**

இலங்கைத் தமிழர் கட்சித்



தலைவர் அமிர்தலிங்கம் டில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தம்பி ஹெக்டர் ஜெயவர்த்தனாவை ராஜீவ் காந்தி அழைத்து பேசினார்.

எனினும் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.

தமிழ்ப் போராளிகள் திம்புவில் இருந்து விமானம் மூலம் சென்னைக்குத் திரும்பினர்.

இப்படியாத் திம்பு சமரசப் பேச்சு தோல்வியில் முடிந்தது.

**பாலசிங்கம், சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்டனர்**

திம்பு பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, சென்னையில் தங்கி இருந்த விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், எஸ்.சந்திரஹாசன், எஸ்.சத்தியேந்திரா ஆகியோர் நாடு கடத்தப்பட்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பூட்டான் தலைநகரான திம்புவில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

இதைத் தொடர்ந்து, விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம், ஈழ மக்கள் பாதுகாப்பு அமைப்பின் (புரோடெக்) தலைவரும் மறைந்த தலைவர் செல்வநாயகத்தின் மகனுமான எஸ்.சந்திரஹாசன், தமிழீழ விடுதலை அமைப்பைச் சேர்ந்த எஸ்.சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்த மத்திய அரசு உத்தரவிட்டது.



பாலசிங்கம்




சந்திரஹாசன்



(தொடரும்)

# பலம் பொருந்தியவர்களுக்காக நாம் சட்டத்தை மாற்ற முடியாது

## விக்கிரமபாகு கருணாரட்ன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**பலம் பொருந்தியவர்களுக்காக சட்டத்தை மாற்றியமைகக முடியாது என புதிய இடதுசாரி கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

யோஷிதவின்கைது தொடர்பில் சிங்கள பத்திரிகையொன்று பல்வேறு தரப்பினரிடம் கருத்து கோரிய போது விக்கிரமபாகு கருணாரட்ன இந்த கருததை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸார் விசாரணைகளின் மூலம் திரட்டிய தகவல்களின் அடிப்படையிலேயே யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரிய ஊழல் மோசடியில் ஈடுபட்ட காரணத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சாதாரண பொதுமக்களுக்கு எடுக்கப்படும் அதே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பலம் பொருந்தியவர்கள் என்பதற்காக சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய முடியாது.

கடந்த காலங்களில் பலம் பொருந்தியவர்ளுக்கு ஒரு நீதியும், சாதாரண பொதுமக்களுக்கு மற்றுமொரு நீதியுமே காணப்பட்டது.

தற்போது அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது அனைவருக்கும் ஒரேவிதமாகவே சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

சட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளுடன் அரசாங்கத்திற்கு தொடர்பில்லை, அதனை அந்தந்த துறையினர் மேற்கொள்கின்றனர்.

1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப்பீடம் ஏறிய போது கைது செய்யப்பட்டு 11 பொலிஸ் சிறைக் கூண்டுகளிலும் 4 சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

நான் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதனால் விடுதலையானேன். குற்றம் இழைக்காவிட்டால் விடுதலையாகுவார்கள்.

எனினும், குடும்ப சொத்துக்களை பெருப்பிக்கவும் தமது நலனுக்காகவும் யோஷித இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் அவர் தண்டனை அனுபவிக்கத்தான்வேண்டும்எனவிக்கிரமபாகுகருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மக்களை கோபமூட்டும் வகையில் கூட்டு எதிர்க்கட்சி செயற்படுகிறது

## அமைச்சர் ஹரின் விமர்சிப்பு

(கொழும்பு)

மக்களை கோபமூட்டும் வகையில் கூட்டு எதிர்க்கட்சி செயற்பட்டு வருவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட சம்பவத்தின் ஊடாக அனுதாப அலையை உருவாக்கி மக்களை ஆத்திரமடையச் செய்ய கூட்டு எதிர்க்கட்சி முயற்சிக்கின்றது.

யோஷித கைதின் பின்னணியில் எந்தவொரு அரசியல் சக்தியும் செயற்படவில்லை.

ஓராண்டு காலமாக பொலிஸார் விசாரணை நடத்தி



அதன் பின்னர், யோஷித கைது செய்யப்பட்டுள்ளார்.

யோஷித குற்றம் செய்யவில்லை என்றால் எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை.

எந்தவொரு பெற்றோரும் தமது பிள்ளை குற்றமிழைத்து சிறைக்கு சென்றாலும் கண்ணீர் வடிப்பது வழமையானதாகும்.

உணர்வு பூர்வமான இந்த விடயத்தை பயன்படுத்தி சட்ட மீறல்களில் ஈடுபட முடியாது.

அரசியல் பின்னணி இருந்திருந்தால் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் சகோதரர் கைதாகியிருக்க மாட்டார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களித்தது நல்லாட்சியை ஏற்படுத்தவேயாகும்.

சட்ட மீறல்களில் அரசாங்கம் ஒருபோதும் ஈடுபடாது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பலவந்தமான அடிப்படையில் இழுத்துச் செல்லப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தார்.

சட்டத்தை தேவையான வகையில் மாற்றியமைத்தே சரத்பொன்சேகா தண்டிக்கப்பட்டார்என ஹரின்பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### படைவீரர் நலன்புரி அமைச்சுப் பதவி பொன்சேகாவிற்கு வழங்கப்படும்?

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவிற்கு படைவீரர் நலன்புரி அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக, சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையல் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அமைச்சரவை அந்தஸ்துடைய படைவீரர் நலன்புரி அமைச்சராக சரத் பொன்சேகா நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தனவின்மறைவினால் ஏற்பட்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு சரத் பொன்சேகா நியமிக்கப்பட உள்ளார். சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், படைவீரர் நலனபுரி அமைச்சுப்பதவியேசரத்பொனசேகாவிற்கு வழங்கப்படும் என கொழும்பு ஊடக மொன்று செயதி வெளியிட்டுள்ளது. (இ)

## இராஜாங்க அமைச்சர்

# திலீப் வெத ஆராச்சி மீது எனக்கு நம்பிக்கையில்லை

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

திலீப் வெத ஆராச்சிக்கு அதிகாரம்வழங்கப்படவேண்டுமென்றால் அவர் நம்பிக்கைக்குரியவராக இருக்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குனுகொலபெலஸவில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர் மீது நம்பிக்கை இருப்பதாக தனக்கு தோன்றவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வரையறுக்கப்பட்ட ஒருசில அதிகாரங்களையே தன்னால் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சிக்கு வழங்க முடியும் என அவர் தெரிவித்தார்.



எவ்வாறாயினும் அமைச்சர் என்ற வகையில் தாம் அவருக்குத் தேவையான அளவை விட அதிக வாகனங்கள் மற்றும் அதிகாரிகளை வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர், தனிப்பட்ட ரீதியிலும் பல உதவிகள் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், கடற்றொழில் இராஜாங்க அமைச்சராக வேறு ஒருவரை நியமிக்க பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடம் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்து திலீப் வெத ஆராச்சி தம்மீது குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யோஷித ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் தான் மிகவும் கவலையடைவதாக கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### உற்சாகம் தேவை

எப்போது பார்த்தாலும் களைப்பு,சலிப்பு, விரக்தி,வெறுப்பு, ஏமாற்றம்.

ஆனால் எதிர் வீட்டுக்காரரைப் பார்த்தால் முகத்தைச் சுளிப்பதே இல்லை.எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கிறார்.சோர்வே அடைவதில்லை.

டாக்டரிடம் காண்பித்தால்,உங்களுக்கு உடலில் எவ்விதக் கோளாறும் இல்லை என்கிறார்.

அப்படியானால் இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன?

வேறு ஒன்றுமில்லை,உற்சாகம் இல்லாதது தான் காரணம்.

எனவே,கோளாறு உடலில் அல்ல, உள்ளத்தில்.

இதற்கு எந்த டாக்டராலும் சிகிச்சை அளிக்க முடியாது.நமக்கு நாமேதான் சிகிச்சை அளித்துக் கொள்ள வேண்டும்.

முயற்சி என்ற இடத்திலிருந்து கிளம்பும் உழைப்பு என்னும் ரயிலில்,வெற்றி என்னும் இடத்தை அடைய வேண்டுமானால் அதற்கு உற்சாகம் என்னும் பச்சை விளக்கு எப்போதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

நமக்குத் தொடர்பு இல்லாத வேலை,நாம் எந்த இலாபத்தையும் அடையாத வேலை என்றால் அதில் உற்சாகம் குறையத்தான் செய்யும்.

ஒரு செயலில் இறங்குமுன் நன்கு சிந்தித்து அதைப் பற்றி எல்லா உண்மைகளையும் முன்வைத்து முடிவுக்கு வரவேண்டும். முடிவுக்கு வந்து விட்ட பின் உற்சாகத்தோடு செயற்படவேண்டும்.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் மனத்திற்கும் நமக்கும் போராட்டம் ஏற்படக் கூடாது.நம் எண்ணமும் செயலும் இணைந்து விட வேண்டும்.நம்முடைய போராட்டமெல்லாம் நம்முடைய இலட்சியங்களை அடைவதில் தான் இருக்க வேண்டுமே தவிர, நமக்குள்ளேயே இருக்கக்கூடாது.

உற்சாகம் இருந்தால் ஊக்கம் பிறக்கும். ஊக்கம் பிறந்து விட்டால் இழந்த சக்தியைத் திரும்பப் பெற்று விடலாம்.

உடலுழைப்பை முடிந்த வரை வீணாக்கக் கூடாது.பட்டரியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மின்சாரத்தை எப்போது தேவையோ அப்போது மட்டும் பயன்படுத்துகிறோம் அல்லவா, சேமித்து வைக்கப்பட்ட தண்ணீரை எப்போது தேவையோ அப்போது மட்டும் பயன்படுத்துகின்றோம் அல்லவா, அதைப் போலவே,நம்முடைய சக்தியையும் தேவையில்லாமல் செலவழிக்கக் கூடாது.

உற்சாகத்தை இழந்து விடாமல் இருக்க ஒருவழி இருக்கிறது.எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு வேலையைக் கட்டிக் கொண்டு அழக் கூடாது.எல்லா வேலைகளையும் ஒதுக்கி எறிந்து விட்டு,மனத்திற்கு மகிழ்ச்சியைத்தரும் செயலகளில் ஈடுபட வேண்டும்.எளிய சிக்கல் மட்டுமல்ல, எத்தகைய சிக்கலாக இருந்தாலும் சரி,உற்சாகமிருந்தால் எத்தகைய இன்னல் களையும் தூள் தூளாக்கி விடலாம்.

லேனா தமிழ்வாணன்

# துப்பாக்கியால் சுட்டு ஒருவர் படுகொலை

சேனைப் பாதுகாவலில் ஈடுபட்டிருந்த நபரொருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்த சம்பவமொன்று வெள்ளவாய அம்பேகமுவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அம்பேகமுவவைச் சேர்ந்த எம்.ஏ.குணசிறி என்ற 42 வயது நிரம்பிய மூன்று பிள்ளைகளின்தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

இக்கொலை குறித்து, அம்பேகமுவைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கொலைக்கான காரணம் கண்டறிப்படாததோடு, கொலையாளிகளும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ)



# சிறுவர் அரங்கம்

1350

# இரு துருவங்கள்!

முதியவர் அருகில் சென்ற அரசன், அவரிடம் ""என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?"" என்று கேட்டான்.

முதியவர் நிமிர்ந்து பார்த்து, தன்னை கேட்டவர் அரசன் என்று தெரிந்ததும், இருகரம் கூப்பி அரசனை வணங்கினான். பிறகு அரசனைப் பார்த்து, ""அரசே! இன்று பகல் முழுவதும் உழைத்து சம்பாதித்த ஒரு பணத்தை தவறவிட்டு விட்டேன். அதைத்தான் தேடிக் கெண்டிருக்கிறேன். நான் தவற விட்ட பணம் எனக்கு கிடைக்க வில்லையென்றால், இன்று இரவு நான் பட்டினி கிடக்க வேண்டியதுதான்,"" என்று வருத்தத்துடன் கூறினார்.

முதியவர் கூறியதைக் கேட்ட அரசன், ""ஐயா! பெரியவரே நீங்கள் தவற விட்ட ஒரு பணம் போனால் போகிறது,

என்னிடம் உள்ள பணமுடிப்பை உங்களுக்குத் தருகிறேன், இதை வைத்து சந்தோஷமாக இருங்கள்,"" என்று கூறினான்.

அரசனிடம் இருந்து பணமுடிப்பை வாங்கிய முதியவர் அதை திறந்தார். அதில் நிறைய காசுகள் இருப்பதைப் பார்த்தார். உடனே முதியவர் பண முடிப்பை அரசனிடம் திருப்பி கொடுத்து விட்டு, ""நான் தவறவிட்ட ஒரு பணத்திற்காக இவ்வளவு காசுகள் எனக்கு வேண்டாம்,"" என்று கூறினார்.



""ஐயா! இந்த வயதான காலத்தில் ஏன் இப்படி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் தரும் பணத்தை கொண்டு சுகமாக இருக்கலாமே,"" என்றார் அரசர்.

""அரசே! நான் கடினமாக உழைத்து அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு உண்பதில் தான் திருப்தி அடைகிறேன். நீங்கள் எனக்கு இனாமாக கொடுக்கும் பணமுடிப்பு என்னிடம் இருந்தால் என் நிம்மதியே போய்விடும். பணத்தை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில், நான் வேலைக்கு எங்கும் செல்லாமல் வீட்டில் சோம்பேறியாக இருந்து விடுவேன். மேலும், நீங்கள் என்னிடம் கொடுக்கும் கொஞ்சம் பணம் இருந்தால், இன்னும் கொஞ்சம் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிறரை ஏமாற்றி அவர்களிடம் உள்ள பணத்தை பறிக்க வேண்டும் என்ற குணம் என்னையறியாமலேயே எனக்கு வந்து விடும். மனநிறைவோடு வாழும் என்னை கெட்டவனாக்கி விடாதீர்கள்.

""இந்நாட்டு அரசனான நீங்கள் அன்புடன் அளித்த பணமுடிப்பை வாங்க மறுத்த என்னை தயவு செய்து, மன்னித்து விடுங்கள். உண்மையிலேயே நீங்கள் எனக்கு உதவி செய்ய நினைத்தால்... உங்களிடம் உள்ள பணமுடிப்பில் இருந்து ஒரே ஒரு காசை மட்டும் தாருங்கள்,"" என்று கூறினார் முதியவர்.

முதியவர் கூறியதைக் கேட்ட அரசன், தன்னிடம் இருந்த பணமுடிப்பில் இருந்து ஒரு காசை முதியவரிடம் கொடுத்தார்.

அரசனிடம் இருந்து காசை பெற்றுக் கொண்ட முதியவர், ""அரசே! நீங்கள் நோய், நொடி எதுவும் இல்லாமல் பல்லாண்டு வாழ்ந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நாட்டு மக்கள் சார்பாக இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்,"" என்றார்.

முதியவரிடம் விடைபெற்ற அரசன் அரண்மனைக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் தன் நாட்டில் இரு வேறுபட்ட குணங்கள் கொண்ட மனிதர்கள் வாழ்வதை நினைத்து பெருமை கொண்டான். இவரைப் போன்ற மனிதர்கள் தன் நாட்டில் வாழ்வதால் தான் பருவமழை பெய்கிறது என்று எண்ணி மகிழ்ந்தான்.

(முற்றும்)

## 02.2016 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

301 - சீனாவில் சீமா லுன் ஜின் ஆட்சியைக் கைப்பற்றினான்.

1377 - இத்தாலியின் செசெனா நகரத்தில் பாப்பரசரின் படைகளினால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

1509 - போர்த்துக்கல்லுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.

1690 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது காகித நாணயம் மசாசூசெட்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1876 - பராகுவே ஆர்ஜெண்ரீனாவுடன் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

1783 - ஐக்கிய அமெரிக்காவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.

1807 - பிரித்தானியப் படைகள் சர் சாமுவேல் ஓஷ்முட்டி தலைமையில் உருகுவேயின் தலைநகர் மொண்டிவிடியோவைக் கைப்பற்றின.

1894 - யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

1916 - கனடாவில் ஒட்டாவாவில் நாடாளுமன்றக் கட்டடம் தீயினால் அழிந்தது.

1919 - சோவியத் படையினர் உக்ரேனைப் பிடித்தன.

1930 - வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.

1931 - நியூசிலாந்தில் நேப்பியர் என்ற இடத்தில் இடம்பெற்ற 7.9 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 258 பேர் கொல்லப்பட்டனர்.

1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா மார்ஷல் தீவுகளைக் கைப்பற்றியது.

1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் 1,000 விமானங்கள் பெர்லின் மீது குண்டுகளை வீசின.

1966 - சோவியத் விண்கலம் லூனா 9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையைப் பெற்றது.

1969 - யாசர் அரபாத் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவானார்.

1984 - சாலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்காண்ட்லெஸ், ராபர்ட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன் முதலாக விண்வெளியில் சுயாதீனமான நிலையில் நடந்து சாதனை படைத்தார்கள்.

1989 - பராகுவேயில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து 1954 இலிருந்து ஆட்சியிலிருந்த சர்வாதிகாரி அல்பிரெடோ ஸ்ட்ரோயெஸ்னர் பதவியிழந்தார்.

2006 - அல் சலாம் 98 என்ற எகிப்திய பயணிகள் கப்பலொன்று செங்கடலில் 1,721 பேருடன் மூழ்கியதில் 435 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.

### பிறப்புகள்

1821 - எலிசபெத் பிளாக்வெல், அமெரிக்க மருத்துவர் (இ. 1910)

1898 - அல்வார் ஆல்ட்டோ, கட்டிடக் கலைஞர் (இ. 1976)

1930 - மணி கிருஷ்ணசுவாமி, கருநாடக இசை வாய்ப்பாட்டு கலைஞர் (இ. ஜூலை 12 2012)

1933 - தான் சுவே, பர்மிய அரசியல்வாதி, பிரதமர்

1963 - ரகுராம் கோவிந்தராஜன், அமெ. பொருளியலாளர்

1976 - ஜெ. ராம்கி, எழுத்தாளர்

1983 - சிலம்பரசன், தமிழ் நடிகர்

### இறப்புகள்

1468 - குட்டன்பேர்க், அச்சு இயந்திரம் கண்டுபிடித்த செர்மானியர் (பி. 1398)

1855 - டானியல் புவர், அமெரிக்க இலங்கை மிஷனின் மூத்த முதல்வர்

1915 - யோன் சிலம்புவே, ஆபிரிக்க விடுதலைப் போராளி (பி. 1871)

1964 - கதிரவேலு சிற்றம்பலம், ஈழத்து அரசியல்வாதி (பி. 1898)

1969 - சி. என். அண்ணாதுரை, தமிழ் நாட்டின் ஆறாவது முதலமைச்சர் (பி. 1909)

1975 - உம் குல்தூம், எகிப்திய நடிகை, பாடகி (பி. 1904)

1987 - ஜோர்ஜ் தாம்சன், பிரித்தானிய மார்க்சியப் புலமையாளர், மானிடவியலாளர் (பி. 1903)

2005 - எர்ணஸ்ட் மாயர், உயிரியலாளர் (பி. 1904)

# அபயராம விகாரையில் அரசியலுக்குத் தடை

(கொழும்பு)

**நாரஹேன்பிட்டியில் உள்ள அபயராம விகாரையில், அரசியல் கூட்டங்களையோ அல்லது வர்த்தக கூட்டங்களையோ நடத்துவதற்கு இடமளிக்கமுடியாது என கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.**

கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி டி.டி.குணசேகர இந்த தடையுத்தரவை பிறப்பித்தார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள அபயராம விகாரையில், அரசியல் கூட்டங்களையோ அல்லது வர்த்தக கூடடங்களையோ நடத்துவதற்கான தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, கிருலப்பனையில் அமைந்துள்ள பூர்வாயமாயா பௌத்த விகாரையின் தலைமை பிக்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தமையை அடுத்தே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான மையமாக, அபயராம விகாரை விளங்குவதாகவும் இது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் கூட்டு எதிர்க்கட்சியினரின் ஊடகவியலாளர் மாநாடுகள் அனைத்தும் அங்கேயே நடைபெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தனது தலைமை பதவி குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தான் குறித்த பதவிக்கு அதிகாரபூர்வமாகவே நியமிக்கப்பட்டதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விகாரை, அரசியல் கூட்டங்களுக்காக பயன்படுத்தப்படுவதால், பௌத்தர்கள் மத்தியிலும் ஏனைய பிக்குமார் மத்தியிலும் மதிப்பிழந்து உள்ளதாகவும் அந்த மனுவல் குறிப்படப்பட்டுள்ளது. இந்தவழக்குதொடர்புடைய அடுத்த கட்ட விசாரணை பெபரவரி மாதம்15ஆம்திகதிநடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# யோஷித கைதை கண்டிக்கின்றேன்

## முரத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ கைது செயயப்பட்ட சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அபயராம விகாராதிபதி முரத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

போதியளவு காரணிகள் எதுவுமின்றி யோஷித கைது செய்யப்பட்டுள்ளார். படையில இணைந்து ஏனைய இளைஞர், யுவதிகள் படையில் இணைந்து கொள்ள முன்னுதாரணமாக யோஷித திகழ்ந்தார்.

போர் இடம்பெற்ற காலத்தில் படையில் இணைந்து கொள்ள இளைஞர்கள் சற்றே பின்வாங்கியிருந்தனர்.


போரை நடத்திய இராணுவத் தளபதிகளின் பிள்ளைகள் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வெளிநாடுகளில் வாழ்ந்து வந்தனர். எனினும் கொடிய போரை இல்லாதொழித்த மகிந்த ராஜபக்ஷவின் மகன் கடற்படையில்இணைந்துகொண்டார்.

ஏனைய இளைஞர், யுவதிகளுக்குஊக்கமூட்டுவதேஇந்த செயற்பாட்டின் நோக்கமாகும்.

புதிய கட்சியொன்றின் ஊடாக அரசியலில் மீள பிரவேசிக்குமாறு மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிடம் கோருகின்றனர். தொடர்ந்தும் இந்த குரோத தரப்புடன் இணைந்திருப்பதில் பயனில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அபயராம விகாராதிபதி ஆனந்த தேரரை 15ம் திகதி நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)



அரசியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக நாரஹேன்பிட்டி ஸ்ரீஅபயராம விகாரையை பயன்படுத்துவதாக குற்றம்சாட்டி தொடுக்கப்பட்டுள்ள வழக்கு தொடர்பில், எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி, வாக்கு மூலம் வழங்குமாறு அபயராம விகாராதிபதி முரத்தட்டுவே ஆனந்த தேரருக்கு கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி ரி.டீ. குணசேகர உத்தரவுப் பத்திரம் அனுப்பியுள்ளார்.

நாரஹேன்பிட்டி ஸ்ரீஅபயராம கிருலப்பனை ஸ்ரீபுர்வாராம விகாரையின் தலைமையில் உபய விகாரையின் விகாராதிபதி பத்பே ரியே விமலஞான தேரரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 622

Search for people, places and things Nagendram Home

செல்வராஜ்




சர்மிலா




தேவன் விது





நதீபன்




ஜெயசந்திரகாந்தன்




தஷா நுஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மைத்திரிபால ஏன் பயந்தார்?



இலங்கை அரசியலில் இப்பொழுது பரபரப்புக்கு பஞ்சமில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது செல்வப்புதல்வன் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட விவகாரம் இப்பொழுது இலங்கையில் மட்டுமல்ல, உலக நாடுகளிலும் பேசப் படும் சம்பவமாக மாறியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன ஆட்சி பொறுப்பை ஏற்று ஓராண்டு நிறைவடைந்து ஒரு மாதமும் கடந்துள்ளது.

இந்நிலையில் கடந்த ஆண்டு, மகிந்தவின் தம்பி பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அடுத்தடுத்து, மகிந்தவும். அவரது மனைவியும், செல்லத்தம்பி கோத்தபாய ராஜபக்ஷவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுக் கொண்டு தான் இருந்தனர்.

எனினும் கைது செய்வதற்கான சூழல் எதுவும் அப்பொழுது இருந்ததாக தெரியவில்லை. ஆனால் திடீரென்று மைத்திரிபால சிறிசேன யோஷித ராஜபக்ஷவை கைது செய்யும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டியிருக்கின்றார்.

அதுவும் இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்ற இந்த சூழ்நிலையில் மகிந்தவின் குடும்பத்தின் முக்கியமான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பௌத்த மத வழிபாட்டிற்காக சென்ற மைத்திரிபால சிறிசேன அங்கிருந்து கொண்டு கைது செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இக் கைது நடவடிக்கைகளும், அதனைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷவின் கலக்கங்களும் ஒருபுறமிருக்க, மைத்திரிபால சிறிசேன பயந்த சம்பவம் ஒன்றும் நிகழ்ந்துள்ளது. மத வழிபாட்டிற்காக மைத்திரிபால சிறிசேன உலங்கு வானூர்தியில் சென்று இருக்கின்றார்.

ஆனால் அவர் புறப்பட்டு செல்லும் பொழுது யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்படவில்லை. திரும்பி வரும் பொழுது கைது செய்யப்பட்டு பொலிஸாரின் காவலில் கொண்டு வரப்பட்டார்.

இந்நிலையிலேயே திரும்பிவரும் பொழுது மைத்திரிபால சிறிசேன உலங்குவானூர்தியில் வருவதற்கு பயந்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த பயத்திற்கான காரணம் இல்லாமலும் இல்லை. இந்த நாட்டை ஆட்சி செய்து சிங்கள மக்களுக்காக நாடு முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தவர் மகிந்த ராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் யோஷித ராஜபக்ஷவை கடற்படையில் இணைத்துக்கொண்டார். இந்நிலையில் இராணுவ பின்புலத்தில் மகிந்தவிற்கும், அவரது புதல்வர்கள், சகோதரர்களுக்கு இன்னமும் ஆதரவு இருக்கின்றது என்பதை மைத்திரிபால சிறிசேன மறந்து விடவில்லை.

உண்மையில் இலங்கை இராணுவம் அரசாங்கத்திற்கு கீழ் கட்டுப்பட்டதா என்பது சந்தேகம்? இலங்கை இராணுவம் அரசாங்கத்தின் கீழ் கட்டுப்பட்டதாக இருப்பின் வடக்கு, கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை விட்டுவிலகும்படி ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பார்.

மீள்குடியேற்ற அமைச்சரின் கருத்துப்படி மக்களை மீள்குடியேற்றுவதில் சிக்கலில்லை.

ஆனால் இராணுவத்தினர் காணிகளை விடுதலை செய்வதற்கு இணங்க வேண்டும் என்று கருத்துரைத்திருந்தார்.

ஆக! தற்போதுள்ள இலங்கை அரசாங்கத்திற்கும் இராணுவத்தினரின் பெரும்பகுதியினர் கட்டுப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

சிங்கள மக்களின் மீட்பராகிய மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட விடயத்தினை அறிந்தால் இராணுவ எதிர்ப்பின் விளைவால் ஏதேனும் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்று ஜனாதிபதி நினைத்திருக்கக் கூடும். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்தியாவின் முன்னாள் பிரமர் ராஜீவ் காந்தி மீது இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் அணிவகுப்பின் போது தனது துப்பாக்கியால் தலையில் பலமாக தாக்கினார்.

அதாவது அன்றைய காலகட்டத்தில் இலங்கையை பிரிக்க இந்தியா சூழ்ச்சி செய்வதாக ஒரு கருத்து நிலவி வந்தது. இதன் எதிரொலியே ராஜீவ் காந்தி மீதான தாக்குதல்.

ஆயினும் வழமையைப் போன்று இலங்கை அரசாங்கம் தனது வியாக்கியானத்தை கொடுத்தது.


தாக்கிய சிப்பாய் மனநோயாளி என்றும். அவர் தெரிந்தே தாக்கவில்லை என்றும் கூறியிருந்தது.

இதே நிலைமை தனக்கும் ஏற்படலாம் எனும் பட்டறிவோடு மைத்திரிபால சிறிசேன பயந்திருக்கக்கூடும்.

எது எவ்வாறாயினும் இலங்கை இராணுவத்தினரிடத்தில் மகிந்த ராஜபக்ஷவிற்கு இருக்கும் செல்வாக்கு இன்னமும் குறையவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த விளைவின் ஒரு பகுதியே இதுவரை மகிந்த ராஜபக்ஷவை கைது செய்வதற்கு மைத்திரி அரசு தயங்குவதற்கான காரணமும் ஆகும்.



யாழ்.ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் சிறுவர் முற்றத்திறப்பு விழாவும் அண்மையில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இல்ல மெய்வல்லுநர் போட்டியின் நிகழ்வுகளின் ஒரு பகுதியையும் நுழைவாயிலினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# எமது எதிர்கால சந்ததியினரை அழிவிலிருந்து பாதுகாப்போம்



## வடக்கு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் செயற்கை உரப்பாவனையை கட்டுப்படுத்தி எமது எதிர்கால சந்ததியினரை பாரிய அழிவில் இருந்து பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக செயற்கை உரப்பாவனை மற்றும் கிருமிநாசினி பாவனை அதிகளவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை உடனடியான தாக்கத்தை வெளிப்படுத்தாமல் காலப்போக்கில் மக்களின் வாழ்வியலில் பாரிய விளைவை ஏற்படுத்தக் கூடியதொன்றாக காணப்படுகின்றன.

வட மத்திய மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1980, 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து விவசாய நடவடிக்கைகள் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. அங்கு அதிகளவான உரப்பாவனையும், கிருமிநாசினி பாவனையும் காணப்பட்டன.

ஆனால் இன்று வட மத்திய மாகாணத்தில் மிகப் பெரிய பிரச்சினையாக சிறுநீரக செயலிழப்பு காணப்படுகின்றது.

அநுராதபுரதம், பொலநறுவை மாவட்டங்களில் 20 தொடக்கம் 30 வீதமான மக்கள் சிறுநீரகம் முற்றாக செயலிழந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வட மத்திய மாகாணத்துடன் சேர்த்து வட மாகாணத்திலும் சில பிரதேசங்களில் இந்த பாதிப்பு காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வெலிஓயா, வவுனியா தெற்கு பிரதேசம், செட்டிகுளம், மல்லாவி போன்ற இடங்களிலும் இந்த நோயின் தாக்கம் அதிகளவில் அறியப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாணத்தின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தூர நோக்குடன் சிந்திக்க வேண்டிய கடமை எமக்கு உண்டு.

இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அடுத்ததாக மிக முக்கியமாக வட மாகாணத்தில் புற்றுநோயின் பரம்பல் அதிகமாக காணப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு தான் தெல்லிப்பழையில் புற்றுநோய் சிகிச்சைநிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கு முன்னைய தகவல்கள் அதிகளவாக எம்மிடம் இல்லை என்றாலும், 2005 ஆம் ஆண்டில் இருந்து ஆய்வு செய்ததன் மூலம் இந்த நோயின் பரம்பல் ஏனைய மாகாணங்களையும் விட எமது மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு பாரிய நோய்க்கு மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக இந்த செயற்கை உரப் பாவனை மற்றும் கிருமிநாசினி பாவனைகளே ஆகும்.

முக்கியமாக இப் பாவனைகளால் நிலத்தடி நீர் அதிகளவில் பாதிப்படைந்துள்ளது. ஆரம்ப காலங்களில் எமது முன்னோர்கள் இயற்கை உரப்பாவனையையே மேற்கொண்டனர்.

ஆனால் தற்போது அந்த நிலை முற்றாக மாறத் தொடங்கியுள்ளது. அது தொடர்பான விழிப்புணர்வும் எம் மக்களிடையே குறைந்த அளவில் காணப்படுகின்றது. எனவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கை மிக முக்கியமாகும்.

செயற்கை உரப்பாவனையை குறைப்பதும் அதற்கு மாற்றீடாக இயற்கைவழிகளைஏற்படுத்தவேண்டும்.

மேலும் எமது மக்கள் மத்தியில் தற்போது சிவப்பு அரிசி பாவனை குறைவடைந்து வெள்ளை அரிசி பாவனையை அதிகமாக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது எமது மாகாணத்தில் 30 வீதமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வெள்ளை அரிசி பாவனையை இதேபோன்று பயன்படுத்தி வந்தால் குறுகிய காலத்தில் 50 வீதத்திற்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

எனவே சிவப்பு அரிசி உற்பத்தியினை அதிகரித்து, உழுந்து, பயறு, சோயா, கௌப்பி போன்ற தானிய வகை உற்பத்திகளையும் அதிகரித்து அதை எமது மக்கள் பயன்படுத்த வேண்டும்.

உணவு முறையிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பாரிய விளைவை எமது சமூகம் எதிர்நோக்கியுள்ளது. எனவே அனைவரும் தூரநோக்குடன் நீண்டகால அடிப்படையில் கருத்தில் எடுத்து எமது செயற்பாடுகளை மேற்கொள்வது நன்மையானவிடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

மல்லாகம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி யோகராணி தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கணக்காளர் திருமதி மஞ்சுளா றஞ்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோ.குலபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி ஓய்வுநிலை முகாமையாளர் சி.விக்கினராஜா, பாடசாலையின் பழைய மாணவர் நா.சத்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

யாழ்.வல்வெட்டித்துறை கம்பர்மலை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்குரிய பரிசில்களை பாடசாலை பற்சிகிச்சையாளர் திருமதி நந்தினி உதயகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (இ-5)

ஆழியவளை சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சக்திவேல்விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர். க.பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் ஓய்வுபெற்ற அதிபருமான அ.சா. அரியகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5-60)



கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் இரத்ததான முகாம் ஒன்று அண்மையில் நல்லூரில் அமைந்துள்ள திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் 28 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியிருந்தனர்.

## சைவசித்தாந்த நூல்-இறுவெட்டு வெளியீடும் ஆடல் அளிக்கையும்

யாழ்.திருமறைக்கலாமன்றம் நடத்தும் மெய்யியல் துளிகள் சைவ சித்தாந்த நூல்-இறுவெட்டு வெளியீடும் ஆடல் அளிக்கையும் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல. 286 பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.திருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சைவசித்தாந்த ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு என்ற நூல் வெளியீடும், உமாபதி சிவாச்சாரியார் அருளிய வினா வெண்பா என்ற இறுவெட்டு வெளியீடும், திருமதி அகல்யா இராஜபாரதி நெறியாள்கையில் திருமறைக் கலாமன்றக் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் பொழிவும் தெளிவும் என்ற ஆடல் அளிக்கை என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை திருமதி வைதேகி செல்மர் எமின் நிகழ்த்தவுள்ளார்.

சிறப்புரையினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஸ்ணவேணி நிகழ்த்தவுள்ளதுடன் இறுவெட்டு அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல்

வடபகுதியில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட பொது மக்கள் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் காணாமற் போனவர்களின் உறவுகள் தவறாது கலந்து கொள்ளுமாறு அச் சங்கத்தின் செயலாளர் து.கமலநாயகி கேட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 077 222 1037, 077 815 5722 என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் நேற்று காலமானார்



(கொழும்பு)

பிரபல சமூக சேவையாளரும் சைவ அபிமானியும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளருமான மு.கதிர்காமநாதன் (வயது-71) நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் காலமானார்.

கடந்த 17 ஆம் திகதி தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்தைத் தலைமை வகித்து நடத்திக் கொண்டிருந்த சமயம் திடீரென இருதய அதிர்ச்சியால் தாக்கப்பட்டு மயங்கிச் சரிந்த அவர் உடனடியாக கொழும்பு பிரபல இருதய சிகிச்சை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். 16 நாட்கள் கோமா நிலையில் இருந்த அவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

நயினாதீவு மண்ணின் மைந்தரான கதிர்காமநாதன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர். அந்தக் கல்லூரியோடும் சமூகத்தோடும் தன்னைப் பிணைத்துக் கொண்ட பரோபகாரி. பல பொது அமைப்புக்களின் முன்னணி அங்கத்தவர்.

இவ்வருடம் உலக தமிழ்ச் சங்கங்களுக்குள் சிறப்பாகச் செயற்பட்டமைக்கான விருது இவர் தலைமையிலான கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. அண்மையில் அதற்கான விருதை மலேசியாவுக்குச் சென்று பெற்று வந்த அவர், அது பற்றிய அனுபவத்தை தமது தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் வைத்து விளக்கி முடித்த சமயத்திலேயே மயங்கிச் சரிந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் இறுதிக் கிரியைகள் நடைபெறும். (இ)

## சிறுவர் மனவடு குறித்து பயிற்சி

சாந்திகம் நிறுவனத்தால் ஒழுங்குபடுத்தப்படுகின்றதும் லண்டனில் இருந்து வருகை தரும் சிகிச்சை உளயவியலாளர் (Clinical Psychologist) பேராசிரியர் வில்லியம் யூலி, சாமில் (Prof.william Yule & shamil) ஆகியோரினால் வழங்கப்படுகின்றதுமான சிறுவர் மனவடு தொடர்பான அரைநாள் பயிற்சி எதிர்வரும் 6 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என சாந்திகம் பணியாளர் வி.முருகதாஸ் அறிவித்துள்ளார். (இ-5)

## கால்கோள்விழா இன்று

அச்சுவேலி ஆவரங்கால் மத்திய முன்பள்ளியின் கால்கோள்விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் தலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினராக யாழ்ப்பாண கல்வித் திணைக்கள ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## 90 மாபெரும் வெற்றிப்படம் ஸ்ரீவள்ளி

வள்ளியின் இடையை துதிக்கையால் சுற்றி வளைத்து தூக்கிப் போட முருகன் அவளை இரு கைகளால் ஏந்திப் பிடிப்பார்.

இப்படிப்பட்ட கட்டங்களில் நன்றாக நடிக்க ஒரு யானைக் குட்டியைத் தேடினார், ஏவி.எம்.

கேரளத்தில், திருச்சூரில் சாமி ஐயர் என்பவர் ஒரு யானைக்குட்டியை வளர்த்து வருகிறார் என்றும் அது தினமும் சமையல் அறை யன்னல் வழியாக துதிக்கையை நுழைத்து இட்லி வாங்கி சாப்பிடுகிறது என்றும் தகவல் கிடைத்தது.

உடனே, ஸ்ரீவள்ளியில் நடிப்பதற்காக அந்த யானையை வாடகைக்கு கேட்டார். ஒரு ரூபாய் கூட வாங்கிக் கொள்ளாமல் யானையை சாமி ஐயர் அனுப்பினார். ஸ்ருடியோவில் யானையைக் கட்டி தீனி போட்டார் ஏ.வி.எம்.

மகாலிங்கமும் ருக்குமணியும் யானையிடம் நன்கு பழகினார்கள். தினமும் வெல்லமும் தேங்காயும் கொடுப்பார்கள். இதன் காரணமாக அந்த யானைக் குட்டி அவர்களிடம் நெருக்கமாக பழகியது.

படத்தை ஏ.வி.எம். டைரக்ட் செய்தார். திரைக்கதை - வசனத்தை சிறப்பாக எழுதியதுடன் துணை இயக்குநராகவும் பணியாற்றினார் ஏ.டி.கிருஷ்ணசாமி.

படப்பிடிப்பு முடிந்து படத்தை ஸ்ரூடியோவில் ஏ.வி.எம். போட்டு பார்த்தார்.

படம் மிகச் சிறப்பாக அமைந்தும் ஒரு பெரிய குறை இருப்பது தெரிந்தது.

பாடல்களை மகாலிங்கம் வெண்கலக் குரலில் சிறப்பாக பாடியிருந்தார்.

ஆனால் ருக்மணியின் குரல்,. அந்த அளவுக்கு கணீரென்று ஒலிக்கவில்லை.


**பின்னணிக்குரல்**

இந்தக்குறையை எப்படி சரி செய்வது என்று ஏ.வி.எம். யோசித்தார்.

அப்போது பி.ஏ.பெரியநாயகி, சிறந்த பாடகியாக விளங்கினார். இனிய குரல் படைத்தவர்.

ருக்மணி பாடிய பாடல்களை, பெரியநாயகியைக் கொண்டு பாடச் செய்து பதிவு செய்தார் ஏவி.எம்.,(தற்போது பாட்டை முன்கூட்டியே பதிவு செய்து கெண்டு, நடிகர் - நடிகைகள் அதற்கேற்றபடி வாயசைப்பதை படமாக்குகிறார்கள். படப்பிடிப்பு முடிந்த பிறகு, குரலை மாற்றுவது மிகக் கடினம். அந்தக் கடினமான காரியத்தை சிறப்பாக செய்து முடித்தார் ஏ.வி.எம்.)

ருக்குமணியின் குரலுக்கு பதிலாக, பி.ஏ.பெரியநாயகியின் குரல் மிகச் சிறப்பாக பொருந்தி விட்டது.


"ஸ்ரீவள்ளி"யில் டி.ஆர்.மகாலிங்கம், குமாரி ருக்மணி.

படத்தை ரிலீஸ் செய்யலாம் என்றிருந்த வேளையில் இன்னொரு சோதனை. என் குரலுக்கு பதிலாக பி.ஏ பெரியநாயகியின் குரலை பயன்படுத்துவதற்கு சம்மதிக்க மாட்டேன் என்று போர்க் கொடி உயர்த்தினார், குமாரி ருக்குமணி.

படம் பிரமாதமாக வந்திருக்கிறது நிச்சயம் சுப்பர் ஹிட் தான் என்பது அவருக்கு தெரிந்திருந்தது. ஸ்ரீவள்ளி வெளிவந்த பின் நிறைய பட வாய்ப்புக்கள் தன்னைத் தேடி வரும், ஏவி.எம். இன் மூன்று படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தால் தனக்கு பாதிப்பு ஏற்படும் என்று அவர் கருதினார். அதனால் தான் குரல் மாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

மூன்று படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை இரத்து செய்தால், குரல் மாற்றத்துக்கு சம்மதிப்பேன் என்று ருக்மணி கூறவே, ஒப்பந்தத்தை இரத்து செய்தார் ஏவி.எம்.

1945 ஏப்ரல் 13 இல் (தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று) ஸ்ரீவள்ளி வெளிவந்தது. மகத்தான வெற்றி பெற்றது. வெற்றி என்றால் எப்படிப்பட்ட வெற்றி! இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் ஸ்ரீவள்ளியைத் தயாரித்தோம்.


அதைவிட பத்து மடங்குக்கு மேல் அது சம்பாதித்துக் கொடுத்து விட்டது. அதுபோன்ற வெற் றியை யாரும் முன்பின் கண்டிருக்க முடி யாது என்றார் ஏவி.எம்.

மதுரை சென்ரல் தியேட்டரில் ஸ்ரீவள்ளி 55 வாரங்கள் ஓடியது.

(தொடரும்)

# இராமன் சீதையை தண்டித்தது அநீதி

## பீகார் நீதிமன்றத்தில் பரபரப்பு வழக்கு



கடவுள் அவதாரமான இராமன் தனது மனைவி சீதையைத் தண்டித்தது அநீதியானது என்று பீகார் மாநிலம் பாட்னா நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் சீதாமார்ஹி மாவட்டத்தைச் சேர்ந்தவர் தாக் கூர் சந்தன் சிங் என்ற சட்டத்தரணி தனது மனுவில் இதை தெரிவித்துள்ளார்.

கடவுள் அவதாரமான இராமன், தனது மனைவி சீதையை, இலங்கையிலிருந்து மீட்டு வந்த பின்னர் கைவிட்டுள்ளதை சட்டத்தரணி தாக்கூர் கண்டித்துள்ளார்.

இந்த முடிவை சலவைத் தொழிலாளி ஒருவர் சீதை குறித்துப் பேசியதை அடிப்படையாக வைத்து அவர் எடுத்துள்ளதாகவும்,

இந்த முடிவு அநீதியானது எனவும், முறையாக விசாரிக்காமல், குற்றச்சாட்டை தெளிவுபடுத்திக்கொளளாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து தனது மனைவியை இராமன் தண்டித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராமனின் செயலுக்கு அவரது தம்பி இலட்சுமணனும் உடந்தையாக இருந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், உண்மைகளை அறியாமல் இலட்சுமணன் தனது அண்ணி சீதையை அவமதித்துள்ளார்.

இதனால் இருவர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் சட்டத்தரணி தாக்கூர் கூறியுள்ளார். (இ)

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவன் கலா வித்தகர் தருமராஜா துவாரகனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரி அதிபர் வண.அருட்தந்தை என்.ஜே.ஞானப்பொன்ராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பி, வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளருமான ந.தெய்வேந்திரராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி. சாந்தினி சிவநேசன், ஓய்வுநிலை இசை ஆசிரியர் சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# ராஜபக்ஷக்களின் கண்ணீர் குறித்து அப்சரா பொன்சேகாவின் கருத்து

எங்கள் குடும்பம் எப்படி துயரடைந்தது, தாஜுடீனின் பெற்றோர் எவ்வாறு துயரடைந்திருப்பர்,பிரகீத் குடும்பம் எவ்வாறு துயரடைந்திருக்கும் என்பதை நாமல் உணரட்டும், இந்தக் கணமே அவரது குடும்பத்தினர் அவர்களிற்கு துணிச்சலிருந்தால் கடந்த காலங்கள் குறித்து உணரும தருணமாக அமையட்டும் என்று முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மகள அப்சரா பொன்சேகா தனது முகப் புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் ஜனாதிபதியின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ தனது பெற்றோர்கள் கண்ணீர் விடுவதை தாங்கிக்கொள்ள முடியவில்லை என கவலை வெளியிட்டுள்ளார். நல்லது. நாமல் ராஜபக்ஷவிற்கு தனது தந்தை மற்றும் தந்தையின் சகோதரர்களின் செயற்பாடுகளால் துன்புறுத்தப்பட்ட, கொல்லப்பட்டவர்களின் பல குடும்பங்கள், தந்தைமார், பெற்றோர், குழந்தைகள அழுதது நினைவில் இல்லையா?

அவரது அரசாங்கம் இந்த நாட்டின் சட்டத்தினை மதிக்கும் அதற்கு கட்டுப்படும் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அவலத்தை , அவமானத்தை, அநீதியை ஒருபோதும் மறக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். (இ)

எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!
– பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கான தீர்வை ஒரே குரலில் கூறுங்கள்

தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசுக்கான சர்வதேச அழுத்தம் மிகவும் அவசியமானதாகும்.

சர்வதேச அழுத்தம் இல்லையாயின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் சாத்தியப்படமாட்டாது.

அதேநேரம் சர்வதேச அழுத்தம் என்பதற்கு அப்பால், தமிழ் மக்களின் ஒருமித்த குரல் என்பதும் கட்டாயமானதாகும்.

எங்களுக்கான தீர்வு இதுவாகவே இருக்க முடியும் என்று ஒரே குரலில் தமிழ் மக்கள் கூறுவார்களாயின் அதனை சர்வதேச சமூகம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளும்.

எனவே, தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்ற விடயத்தில் தமிழர்களின் ஒன்றுபட்ட குரலே வலிமையானதாக இருக்கும். இதனைத் தமிழ்த் தரப்புக்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

இதனை விடுத்து ஆளுக்கொரு தீர்வுத்திட்டம் தயாரிக்க முற்பட்டால் அதன் விளைவு எங்களுக்கு பாதகமாகவே அமையும்.

ஆக, ஒரு முழுமையான, ஏற்புடையதான தீர்வுத்திட்டம் ஒன்றை தமிழ் மக்கள் பேரவை தயாரித்துள்ள நிலையில், ஏனைய அமைப்புக்கள் தாங்களும் தீர்வுத்திட்டம் தயாரித்தல் என்பதை விடுத்து,

தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்தை ஆராய்ந்து அவற்றை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது திருத்தங்களை முன்வைத்து குறித்த தீர்வுத்திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தல் என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் அனைத்துத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டதான தீர்வுத்திட்டம் தமிழர் தரப்பில் உருவாகிவிடும்.

இதன் பின்னர் இலங்கை அரசாயினும் சரி; சர்வதேச சமூகமாயினும் சரி எவரிடமும் இதுவே எங்களுக்கான தீர்வுத்திட்டம். இதனையே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்று உறுதிபட நாம் கூறமுடியும்.

இதனைவிடுத்து தமிழ் மக்கள் பேரவை தீர்வுத்திட்டத்தை தயாரிக்கும் நல்லதொரு முயற்சியை, எவரும் செய்யாத வேளையில் செய்து முடித்த பின்பு நாங்களும் தீர்வுத்திட்டம் தயாரிப்போம் என்று கிளர்ந்தெழுவது தமிழ் மக்கள் சார்ந்த செயற்பாடாக இருக்க முடியாது.

மிகப்பெரும் இழப்புகளைச் சந்தித்த தமிழினம் எதுவும் இல்லாமல் வாழ்வதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதன்று என நினைத்தால்,

எங்கள் இனம் எதிர்காலத்திலாவது சுதந்திரமாக வாழ வேண்டும் என்று நாம் கருதினால், ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றாக–ஒரே குரலில்; ஓ! சர்வதேசமே எங்கள் மீது உனக்கு கரிசனை இருந்தால் நாங்களும் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டும் என்று நீ நினைத்தால்,

இதோ! எங்களுக்கான தீர்வுத்திட்டம். இதை அமுலாக்கு என்று கேட்பதே ஒரே வழியாக இருக்கும். இதனைச் செய்வதாக இருந்தால், தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளும் பொது அமைப்புகளும் ஆராய்ந்து திருத்தங்கள் இருப்பின் அதனை முன்மொழிந்து செம்மையாக்கி தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் அனைவரும் தமக்கான தீர்வாக முன்வைக்கின்றனர் என ஒரே குரலில் வெளிப்படுத்துவதே சிறந்ததும் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியதுமான செயலாகும்.

## இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்
## இலங்கை வரவுள்ள சுஷ்மா சுவராஜூடன் யாழ்.கடற்தொழிலாளர்கள் நேரில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் நாளை மறுதினம் 5-ம் திகதி யாழ். மாவட்ட கடற்தொழில் சம்மேளனம் நேரடியாக கலந்துரையாடுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இவ்ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைத் தலைவர்களாக முன்னிலை வகித்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சரவணபவன் மற்றும் திணைக்களப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், சமூக அமைப்புக்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகளினால் மூன்று பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன.

இதற்கமைய மீனவ உலர் உணவு நிவாரணம், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலால் ஏற்படுகின்ற தாக்கம், சீனக்கம்பனிகள் கிராமமட்ட சங்கங்களுடன் பங்காளிகளாக இணைந்து மீன் மற்றும் நண்டு வளர்ப்புத் திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும் என்ற மூன்று பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன.

இதுதொடர்பாக கவனத்தில் கொண்ட பிரதிநிதிகள், கடற்தொழிலாளர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுப்பதாக யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் பிரச்சினைக்கு நாளையதினம் இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் யாழ்.மாவட்ட கடற்தொழில் சம்மேளனம் கலந்துரையாடுவதற்கு நாளை மறு தினம் 5-ம் திகதி ஏற்பாடுகள் செய்து தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மூன்றாவது விடயமான சீனக்கம்பனிகள் மீன் மற்றும் நண்டு வளர்ப்பில் இணைந்து பங்காளிகளாக செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டிய பிரச்சினை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக மீன்பிடி உதவிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெளிவான விளக்கங்களை வழங்கியுள்ளார். (செ-5)

## மோ.சைக்கிள் - ஹன்ரர் விபத்து; இளம் குடும்பப் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள் – ஹன்ரர் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதில் உரும்பிராய் சிவகுல வீதியைச் சேர்ந்த நிரோஜன் சொப்னா (வயது-32) என்ற ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உரும்பிராய் நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த பெண்ணை எதிரே வந்த ஹன்ரர் ரக வாகனம் மோதியதில் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

தலை, கை, கால் என்பவற்றில் படுகாயமடைந்த குறித்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-5-30)

## ஞானச்சுடர் தைமாத மலர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சந்நிதியின் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் இதழின் 217 ஆவது தை மாத மலர் வெளிவந்துள்ளது. (இ-5)

## அரசியலமைப்பு பிரதிநிதித்துவ ஆணைக்குழுவுக்கு மக்களால் முன்வைக்கப்படவேண்டிய அடிப்படை தீர்வு விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்

(மாமூலை)

மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய அரசியலமைப்பிற்கான அரசாங்க பிரதிநிதித்துவ ஆணைககுழுவிற்கு மக்களால் முன்வைக்கப்பட வேண்டிய அடிபபடை தீர்வு விடயங்கள் பற்றிய கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மணடபத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்காந்தராசாவின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில், அரசாங்க பிரதிநிதித்துவ ஆணைக்குழுவிற்கு அனைத்து சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மக்களும் ஒன்றிணைந்து எமது மக்களுடைய தீர்க்கப்படாத அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி இதுவரைகாலமும் அடக்கப்பட்டு மறுக்கப்பட்ட உரிமைகளை வலியுறுத்தியும் நீண்ட காலமாக உரிமைகளுக்காக போராடும் இனம் எனற அடிப்படையிலும் தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொணடார். இவ் அரசாங்கம் எமது அடுத்து வரும் சந்ததியினர் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ வழிசெய்ய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மக்களுடன் அரசியல் அமைப்பிற்கான அடிப்படை கோட்பாடுகள், அதிகாரப்பகிர்வு, தேர்தல் முறைமை உரிமைகள் மீதான் சட்டம் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் நாட்டின் தேசிய பிரச்சினைக்குரிய தீர்வுக்கான அடிப்படையான யாப்பு முன்மொழிவுகள் வழங்கப்பட்டன.

மக்களின் கருத்துக் கணிப்பு இம்மாதத்தினுள் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-292-301)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

அந்த வகையில் 4ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடியவரை, இரணையிலுப்பைக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், ஈச்சங்குளம், கிடாச்சூரி, காக்கையன்குளம், பூம்புகார், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில் நுட்பக் கல்லூரி, TMM. கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## துப்பாக்கி ரவைகளுடன் பூநகரியில் குடும்பஸ்தர் கைது

பூநகரி தெளிகரைப்பகுதியில் 56 ரக துப்பாக்கி ரவைகள் 7, வெங்காய வெடி எனப்படும் மிருகங்களை வேட்டையாடும் வெடிப்பந்து 3 என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்ததே குறித்த சந்தேக நபர் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பூநக்ரி தெளிகரையை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் என்றும இவர் ரவைகளை பயனபடுத்தி வேட்டையாடி இருக்கலாம் எனவும் பூநகரி பொலிஸ் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளைத் தேடுங்கள்



✦ பூமியின் நான்கு திசையிலும் தேடிச் சென்றாலும் ஒரு இடத்திலும் கடவுளைக் காண முடியாது. அவர் உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கிறார்.

✦ பிறருடைய குற்றத்தைப் பற்றிப் பேசுபவன் காலத்தை வீணாகக் கழிக்கிறான். அதனால், அவன் தன் நிலையிலிருந்து தாழ்ந்து விடுகிறான்.

✦ கடின உழைப்பும், விடாமுயற்சியும் கொண்டவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

✦ பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல, பெருமைப்பட வாழ வேண்டுமானால் அடக்கமும், பணிவும் கொண்டிருங்கள்.

✦ வாழ்வில் முதலில் கடவுளைத் தேடுங்கள். பிறகு பொருளைச் சம்பாதியுங்கள். இதனைப் பின்பற்றினால் நிம்மதியை அடையலாம்.

# மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் நமக்காக நாம் அமைப்பும் நடத்திய

# மாவட்ட மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## நியூஸ்ரார் வி.கழகம் சம்பியன்





பொங்கலை முன்னிட்டு மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் நமக்காக நாம் அமைப்பும் நடத்திய அணிக்கு 7 பேர் 6 ஓவர் கொண்ட மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

பொங்கலை முன்னிட்டு மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் நமக்காக நாம் அமைப்பும் நடத்திய அணிக்கு 7பேர் 6 ஓவர் கொண்ட மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டிகளின் இறுதிப் போட்டி 31.01.2016 மாலை 3 மணிக்கு மானிப்பாய் அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் மானிப்பாய் இந்தியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய மானிப்பாய் இந்தியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3 விக்கெட்களை இழந்து 81 ஓட்டங்களை பெற்றது.

அணிக்காக ரஹீம் 56 ஓட்டங்களையும் பவிந்திரன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் மோகனதீபன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 82 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ரமணனின் அதிரடி கைகொடுக்க 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதில் ரமணன் 46 ஓட்டங்களையும் மோகனதீபன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.


பந்துவீச்சில் மானிப்பாய் இந்தியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் ராம் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது அரையிறுதியில் சங்கானை நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் சுன்னாகம் காந்திநியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சங்கானை நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 33 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. யோகசாந் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 34 என்னும் இலக்கோடு துடுப்பாடிய சுன்னாகம் காந்திநியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.





இதன்படி இறுதிப் போட்டியில் சுன்னாகம் காந்திநியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4 விக்கெட்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் ரமணன் 19 ஓட்டங்களையும், கண்ணன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் செந்தா 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலளித்து 59 என்னும் இலக்கோடு துடுப்பாடிய சுன்னாகம் காந்திநியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஒரு கட்டத்தில் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

எனினும் களம் புகுந்த தயாளன் அதிரடி காட்ட இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தது.


ஆட்டமிழக்காமல் அதிரடியாக 40 ஓட்டங்களைக் குவித்த தயாளன் போட்டியின் சிறப்பாட்டக்காரனாக தெரிவானார்.

அமைப்பின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ஆர்.பவிஷன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டுத் துறை முதல்வர் எஸ்.உதயணன். முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் அமைப்பின் இயக்குநருமான க.உஷாந்தன். மானிப்பாய் மேற்கு இளைஞர் கழக தலைவர் உதயன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களையும் விருதுகளையும் வழங்கி வைத்தனர். (க-23)



கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட மாவட்ட மட்டத்திலான மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டியின் பரிசில் வழங்கல் நிகழ்வுகளை படத்தில் காணலாம்.

## இன்றைய போட்டி



இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 4 டெஸ்ட் கொண்ட தொடரை இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

5 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் புளோயம் பாண்டீசில் இன்று நடக்கிறது. சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்த தென்னாபிரிக்கா ஒருநாள் தொடரில் பதிலடி கொடுக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க் கப்படுகிறது. காயம் அடைந்த அல்பி மார்கலுக்கு பதிலாக டேவிட் வைஸ் அணிக்கு தேர்வாகியுள்ளார். (கு)

## யோஷிதவுக்கு...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த லெப்.யோஷித ராஜபக்ஷ கடற்படைத் தளபதியின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் பல்வேறு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

இந்த வெளிநாட்டுப் பயணங்களின் போது கடற்படைத் தளபதியிடம் லெப். யோஷித ராஜபக்ஷ வாய்மூலமோ அல்லது எழுத்து மூலமோ அனுமதி கோரவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வெளிநாட்டு பயணங்கள தொடர்பில் அவர் தனது மேலதிகாரிகளிடமும் தெரிவிக்கவில்லை என்பது கடற்படை நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்புத்துறை அமைச்சுக்கு கடற்படை அனுப்பியுள்ள அறிக்கையில், விசாரணையின் போது லெப்.யோஷித ராஜபக்ஷ தவறிழைத்துள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடற்படையின் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளை மீறிய குற்றச்சாட்டுத் தொடர்பாக லெப்.யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி கடற்படைத் தளபதிக்கு பாதுகாப்புத்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் அவரது பதவி பறிபோகும் வாய்ப்பும் உருவாகியுள்ளது.

ஏற்கெனவே சி.எஸ்.என் நிறுவனத்தில் இடம்பெற்ற நிதிமோசடி தொடர்பில் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு வெலிக்கட சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-12)

## மனித உரிமை...

வதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. நல்லிணக்கம் இன்றி பொறுப்பு கூறுதல் இல்லை, பொறுப்பு கூறுதல் இன்றி நல்லிணக்கமில்லை.

மனித உரிமைகளை பாதுகாக்க அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தை மேம்படுத்த அரசாங்கம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆசியாவின் வலுவான நாடாளுமன்றமாக இலங்கை மாற்றமடையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன் போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (செ-11)

## திருப்பி அடிப்...

ந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குருநாகல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக எங்களை தள்ளிக் கொண்டே இருந்தால் நாம் என்ன செய்ய முடியும் என்று தெரிவித்த மகிந்த சுவருடன் மோதினால் திரும்ப நேரிடும் என்றும் அதனால் திருப்பி அடிக்க வேண்டி ஏற்படும் என மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்னமும் சுவரில் தளர்வில்லை என்றும் அதற்கு இன்னமும் காலம் இருப்பதாக தான் கருதுவதாகவும் குறிப்பிட்ட மகிந்த, யோஷிதவுக்காக நான் கண்ணீர் சிந்தும் புகைப்படங்களை ஊடகங்கள் மகிழ்ச்சியோடும் வெளியிட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## சுதந்திர தின...

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

வட கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவானது எமது பிரதேச மக்களின் மனித உரிமை மீறல்கள், காணாமல் போனோரை பற்றி தேடல்கள, அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து 8 மாவட்டங்களிலும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

ஆனால் இன்று வரை தமிழ் மக்களுக்கு எந்தவொரு நிலைக்கத்தக்க சுதந்திரமும் கிடைக்கவில்லை. காணாமற்போனோர் தொடர்பாக சரியான பதில இதுவரை கிடைக்கவில்லை, அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை, நல்லாட்சியிலும் கைதுகள் இடம பெறுகின்றன, காணாமல போனோரின் உறவினர்களுக்கு இன்று வரை அச்சுறுத்தல்கள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளன,

மற்றும் தமிழ் மக்களின் நிலங்கள் இப்போதும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எவ்வாறு தமிழ் மக்களாகிய நாம் சுதந்திரதினத்தை கொண்டாட முடியும்.

எனவே நாளைய சுதந்திரதினத்தை வட கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் கறுப்பு கொடிகளை கட்டி துக்கதினமாக அனுஷடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## நிதிக் குற்ற...

பேசிய போதே மக்கள் பிரதிநிதிகள் நிதி மோசடி பிரிவை கலைக்க ஜனாதிபதியிடம் கோரப் போவதாக தெரிவித்தனர். நிதி மோசடி பொலிஸ் பிரிவு சட்டரீதியற்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில் தமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாது போனால் தாம் பதவிகளை ராஜினாமா செய்யப் போவதாகவும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் எச்சரித்தனர்.

சுமேதா ஜி ஜெயசேன, சுசந்த புஞ்சிநிலமே, நிமல் லன்சா, அநுராத ஜெயரட்ன, நிசாந்த முத்துஹெட்டிகம ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இதேவேளை நிதிக் குற்ற விசாரணைப் பிரிவை உடனடியாக கலைத்து விட வேண்டும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

இந்த நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு சட்டரீதியாக உருவாக்கப்படவில்லை. இது எமது வழக்கை விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகளைக கொண்டு வருவது போன்றது.

சட்ட வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாகவே நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு செயற்படுகிறது.

யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்து அதனை முடிக்க வேண்டும். இப்போது யோஷித ராஜபக்ஷ ஒரு சந்தேக நபர் தான்.

நீதிமன்றத்தில் அவருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே, அவர் குற்றவாளியா இல்லையா என்பது மக்களுக்குத் தெரியும். அவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று விரைவில் தெரியவரும் என்றும் நிமால் தெரிவித்துள்ளார். (செ-12)

## எமது பயண...

எமது குடும்ப உறுப்பினர்களை சிறையில் அடைப்பதனால் எமது பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முனைப்பு காட்டுவதில்லை.

எமது குடும்ப உறுப்பினர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் துன்புறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது.

எனினும் நீதிமன்றம் மீது எமக்கு பூரண நம்பிக்கையுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் தண்டனை விதித்ததன் பின்னரே பிணை வழங்குவதா இல்லையா என்பதனை தலைகீழாக தீர்மானிக்கின்றது என நாமல் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-12)

## தமிழில் தேசி...

பாடப்படக்கூடாது.

இந்தியாவில் பல மொழிகள் உள்ள போதும் தேசியகீதம் ஒரு மொழியிலேயே பாடப்படுகிறது என்று மகிந்த சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

# சூது விளையாடிய 7 பேர் கைது

## ரூ.239,500 பணம் பறிமுதல்

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து பணத்திற்கு சூது விளையாடிய 7 பேரை கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி இரவு கைதான 7 பேரும் கிளிநொச்சி, சுன்னாகம், யாழ்ப்பாணம் பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அவர்களின் மோட்டார் சைக்கிள் நான்கும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். அத்துடன் சூது விளையாடுவதற்கு தயாராக வைததிருந்த 2 இலட்சத்து 39ஆயிரத்து 500 ரூபாய பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் நீண்டகாலமாக பணத்திற்கு சூது விளையாடுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்திருந்தது.

இது தொடர்பில் அப்பகுதியினை சுற்றி வளைத்த பொலிஸார் சந்தேக நபர்கள் 7 பேரையும் கையும் மெய்யுமாக பிடித்தனர்.

இவ் வீட்டில் சூது விளையாடும் ஒவ்வொரு நாளுக்கும் வீட்டினை பராமரித்து வரும் அயலவர் ஒருவர் தினமும் 5ஆயிரம் ரூபாய் வாடகை பெற்று வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரில் ஒருவர் தான் சூது விளையாடிய 20 வருடங்களில் 3 1/2 கோடி ரூபாய் பணத்தினை இழந்துள்ளதாகவும், அதனை மீட்கவே தொடர்ச்சியாக விளையாடுவதாக தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும், சான்றுப் பொருட்களையும் யாழ். நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த பொலிஸார நடவடிக்கை எடுத்துள்ளனர். (செ-12)

# அரசாங்கத்தின் அறிவிப்புக்களால் பாதிக்கப்பட்டோருக்கு ஏமாற்றம்

## கஜேந்திரகுமார் சாடல்

போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச பங்களிப்போ, ஒத்துழைப்போ, தலையீடோ இருக்காதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அமைச்சர்களும் தெரிவித்து வருவதானது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அனைத்தும் அமெரிக்க, இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் தங்களின் பூகோள அரசியல் நிலைமையை பாதுகாத்துக் கொள்வதற்காகவே அன்றி, தமிழ் மக்களின் அடிப்படை நலன்களுக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயங்களை பெற்றுக் கொடுப்பதற்காகவும் அல்ல.

பாதிக்கப்பட்ட மக்களே தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த காலத்தை போலல்லாது, நடக்கும் எல்லா விடயங்களையும் மக்கள் விமர்சன கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டியது அவசியம்.

தமிழர்களுக்கு தனித்தேசம் என்ற கொள்கையினை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் கைவிடாது. தமிழர்களுக்கு தனிதேசம் என்ற கொள்கையினை கைவிடுவதானது தமிழ் மக்களின் இருப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் விடயமாகும்.

இதன் காரணமாக நாம் ஒருபோதும் தமிழர்களுக்கு தனிதேசம் என்ற கொள்கையினை கைவிடப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# எம்பிலிப்பிட்டிய கொலைச் சம்பவம்

## ஏ.எஸ்.பி கைது

(கொழும்பு)

இரத்தினபுரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த டீ.டப்ளியூ.சி.தர்மரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விருந்து நிகழ்வொன்றின் போது, பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில், இரத்தினபுரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த டீ.டப்ளியூ.சி.தர்மரத்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகராக இருந்த எஸ்.ஆர்.ஜே.டளஸ் உள்ளிட்ட சிலரை உடனடியாகக் கைதுசெய்யுமாறு, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றம் கடந்த 27-ம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

எதுஎவ்வாறு இருப்பினும் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சில நாட்கள் ஆன போதும், சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கப் பெறாததால் அவர்கள் கைதுசெய்யபடவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்று வாக்குமூலம் அளிக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட தர்மரத்ன பின்னர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

# சஜின் வாஸுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணை

சொத்து விபரம் தொடர்பில் தகவல்களை வழங்காமை குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, கொழும்பு மேலதிக நீதவான் வருணி ஆட்டிகல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணைகளின் போது பாராளுமன்றத்தின் பிரதி பொதுச் செயலாளர் நீல் பராக்கிரம இத்தவெல சாட்சி வழங்கினார்.

இதன்போது சஜின் வாஸ் குணவர்தனவின் சொத்து விபரம் தொடர்பிலான ஆவணங்களை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

அந்த ஆவணங்கள் தொடர்பில் சபாநாயகரிடம் கோர வேண்டும் எனவும், சபாநாயகரின் அனுமதியின்றி அவற்றை முன்வைக்க முடியாது எனவும் இதன்போது சாட்சியாளர் குறிப்பிட்டார்.

சப்ாநாயகரின் அனுமதியுடன் குறித்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கால அவகாசம் தேவை என்பதால் மனு மீதான விசாரணை எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. (செ-12)

# கடற்படை...

ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் கைது தொடர்பில் அர சாங்கத்தின் நிலைப்பாட்டை தகவல் திணை க்கத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், கடற்படை அதிகாரியான லெப்.யோஷித ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் கைதை பலர் அரசியல் பழிவாங்கலாக காட்ட முற்படுகின்றனர். ஆனால் அது அவ்வாறில்லை. நாட்டில் கறுப்பு பணம் பயன்பாட்டிற்கு எதிராக சட்டம் உள்ளது. இந்தச் சட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அதாவது 2006ஆம் ஆண்டிலேயே கொண்டு வரப்பட்டது. சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாகவே கறுப்புப் பணம் சுத்திகரிப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டத்திற்கு முரணாக நிதி சேர்த்தல் மற்றும் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் என்ப வற்றை தடுப்பதே இந்த சட்டத்தின் நோக்கமாகும்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டு கறுப்பு பணத்தை தூய்மையாக்க குற்றவாளிகள் பல்வேறு வியாபாரங்களை முன்னெடுப்பது வழக்கம். போதைப் பொருள் கடத்தல்காரரான வெலே சுதா கைது செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையில் உள்ளார். எனவே நாட்டில் சட்டம் அனைவருக்கும் ஒரே விதமாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதில் நல்லாட்சி அரசாங்கம் தீர்க்கமாக உள்ளது.

சிஎஸ்என் நிறுவனத்தின் நிதி மோசடி தொடர்பில் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிஸ் நிதி மோசடி பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையிலேயே நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவன த்தின் ஆரம்ப முதலீடுகளுக்கு அப்பால் சென்று 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எவ் வாறு பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதே சட்ட த்தின் கேள்வியாகும். இதற்கு பதிலளிக்க யோஷித ராஜபக்ஷவினாலோ அல்லது அந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினாலோ முடியவில்லை. அதேபோன்று கடற்படை அதிகாரியான யோஷித ராஜபக்ஷ எவ்வாறு வேறு ஒரு நிறுவனத்தில் தீர்மானம் எடுக்க கூடிய பதவியை வகிக்க முடியும். இவர் சிஎஸ்என் நிறுவனத்தின் தலைமை பதவியை வகித்தமைமையை அவர் பயன்படுத்திய மின்னஞ்சல்கள் ஊடாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு முறையான விசாரணைகளின் ஊடாகவே யோஷித ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந் நிலையில், கடற்படை அதிகாரியான யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே கடற்படையில் லெப்டினன்ட் தர நிலையில் உள்ள யோஷித ராஜபக்ஷ இராணுவ நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் பழிவாங்கல் காரணமாக அன்று முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டிருந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயம்.

எனவே, நாங்கள் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாக கூறுவது முற்றிலும் தவறான கருத்தாகும். வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒரே சட்டம் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால் யோஷித ராஜபக்ஷவின் கைதினை அரசியலாக்கி சுதந்திர தின நிகழ்வுகளை குழப்பியடிக்க சதி திட்டம் தீட்டப்பட்டு வருகின்றது. அதனை எதிர்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். பிள்ளைகளை முறையாக வளர்க்காது நல்லொழுக்கங்களை கற்றுக் கொடுக்காது செய்யும் தவறுகளுக்கு துணை போய் தற்போது கண்ணீர் விடுவதில் பலனில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

# ரூபாய் 5 கோடி...

நாட்டு பணத்துடன் பெண் ஒருவரை யாழ். பொலிஸ் குற்றப்புலானாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த தங்கம் யாழ்.குடாநாட்டின் ஊடாக இந்தியா கொண்டு செல்லப் படவிருந்த நிலையிலேயே மேற்படி பெண் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்றைய தினம் அதிகாலை 3 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு கைது செய்யப் பட்டவர் வலிகாமத்தில் உள்ள வெதுப்பக உரிமையாளரின் மனைவி என தெரிய வருகின்றது. இவரிடமே மேற்படி தங்கம் மற்றும் வெளிநாட்டு நோட்டுக்கள் என்பன யாழ்.பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம்- மாதகல் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பக உரிமையாளர் ஒருவரின் மனைவி சாவகச்சேரி- சங்கத்தானை பகுதியில் வான் ஒன்றில் தங்கம் கடத்தப்படுவது தொடர்பாக குற்றப் புலனாய்வுத்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து நடத்தப்பட்ட சோதனையின் போதே மேற்படி தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி தங்கம் சாவகச்சேரி, சங்கத்தானை பகுதியிலிருந்து மாதகல் கொண்டு செல்லப்பட்டு மாதகல் பகுதியிலிருந்து கடல் வழியாக இந்தியா கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தமை முதற்கட்ட விசாரணைகள் ஊடாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தில் 100 கிராம் அளவிலான 70 தங்க கட்டிகள், 7 அமெரிக்கன் டொலர்கள், 100 கனேடியன் டொலர்கள், 1000 இந்தியன் ரூபாய்கள், 84 ஆயிரம் இலங்கை பணம் ஆகியன இருந்ததாக பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற பொலிசார் இதன் பின்னணியில் பலர் இருப்பதாக சந்தேகம் தெரிவித்துடன் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட பெண் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்கரன் முன்நிலையில் பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது குறித்த பெண்ணை நாளை மறுதினம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (செ-4,9,29)

# ஜனாதிபதி...

இதற்கான வரத்தமானி அறிவித்தலை ஜனாதிபதி விடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

வங்கிக் கணக்குகளை ஆராய்வது தொடர்பில் ஆணைக்குழுவிற்கு இருந்த அதிகாரங்கள் இதற்கமைய அதிகரிக்கப்படவுள்ளதாக லெசில் டி சில்வா சுட்டிக்காட்டினார்.

ஏதேனுமொரு சம்பவம் தொடர்பில் விசாரிக்கப்படுபவர் போன்றே, அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் வங்கிக் கணக்குகளை ஆராய்வதற்கும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ள மனுக்களின் தன்மைகளுக்கு அமைய ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை செயற்றிறனுடன் நிறைவேற்றுவதற்கு மேலதிக அதிகாரம் தேவைப்படுவதாக ஆணைக் குழு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## பணிப்பெண் தேவை

கொழும்பிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு வீட்டுவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:-0774609400

## காணி விற்பனைக்கு

கைதடி கிழக்கு கொத்தாக்குடையில் (ஒயிட்டி செம்பாடுபுலம்) 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 9 இலட்சம்)

தொடர்புகளுக்கு:-
076 700 8559 (3455)

## மணிவிழா வாழ்த்து



"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய சுகையாளன்"
"கலியுக காருண்யன்" என்னும்
கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு. E.S.P நாகரத்தினம்
அவர்களின்
மணிவிழா சிறக்க எமது
இதய பூர்வமான வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:-
குமார் பேக் ஹவுஸ்
பாஷையூர், யாழ்ப்பாணம். (3478)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை III (SLEAS)

மேற்படி ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

பொது உளசார்பு/ பொது விவேகம்:திரு.இ.சர்வேஸ்வரா (SLEAS தகைமை)

கல்வி நிர்வாக முகாமைத்துவம்:கலாநிதி B.தனபாலன்

ஒப்பீட்டு கல்வி-திரு.ஜீவராஜா MA

குறிப்பு:-இலங்கை நிர்வாக சேவை (SLAS)க்கான வழிகாட்டல் விரிவுரைகளும் நடைபெறுகிறது.

T.No:-0212228148,
0215689477,
0778469721,
0773144762

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-3609)



UK, France, Germany, Swiss, Italy...

வாசல் திறக்கிறது ஐரோப்பா!

Study in Romania

(ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடு)



வங்கி பண வைப்பு, IELTS அவசியமில்லை

With Work Permit & PR

பிரத்தியேக தூதரக அங்கீகாரம் கொண்ட பிரதிநிதியுடான சேவை

SIKARAM Any Visa to Any Country

மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள

www.sikaram.lk

Tel: 0777 32 4004 , 021 222 00 11

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

## வேலையாள் தேவை

சைவ உணவகத்துக்கு அப்பம் வேலை தெரிந்தவர் தேவை. (துங்கிநின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:- 0773715920 (3476)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

இலவச உணவு, இலவச தங்குமிடம். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு:-
0773916047 (3473)

## மணிவிழா வாழ்த்து



"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய சுகையாளன்"
"கலியுக காருண்யன்" என்னும்
கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு. E.S.P நாகரத்தினம்
அவர்கள்
இன்று போல் என்றும் வாழ
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
N.ஸ்ரீரஞ்சன் குடும்பத்தினர் (ஆசிரியர்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி (c-3611)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சுபத்திராதேவி



பருத்தித்துறையினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுபத்திராதேவி அவர்கள் நேற்று (02.02.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், நித்தியானந்தன், சச்சிதானந்தன் (லண்டன்), நிர்மலாதேவி, லோகானந்தன் (நெதர்லாந்து), ஜெயானந்தன் (பிரான்ஸ்), மஞ்சுளாதேவி, பரிமளாதேவி (நெதர்லாந்து), கதிர்ச்செல்வன் (லண்டன்), சிறிதேவி, கலைச்செல்வி (லண்டன்), கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி குழந்தைவேலு (தம்பியண்ணா) அவர்களின் அன்புத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.02.2016 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கல்லூரி வீதி, ஆத்தியடி, பருத்தித்துறை.
தொ.பே:-0779237289 (சி-3612)
தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.